நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 22839 — 34238



செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4586 1984 ஜூன் 19 செவ்வாய்க்கிழமை ★ ★ ★ தினபதி



அம்பிகா!
உங்களை
அழைக்கின்றுள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238.


ஜனுதிபதி விஜயத்தின் போது

# நாட்டின் நற்பெயரை கெடுக்க முயற்சியா?

ஷாமா கொலை:

## நில அளவையாளர் சட்டத்தரணி கைது

ஷாமா படுகொலை கொலை தொடர்பாக கேகாலைப் பகுதியைச் சேர்ந்த நில அளவையாளர் ஒருவரும் கொழும்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரும் சந்தேகத்தில் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

குறிப்பிட்ட ஒருவரின் சொத்துக்கு உரிமையானவர்களை குறைப்பதே இக் கொலையின் நோக்கமாக இருக்குலாம் என்று பொலீஸார் கருதுகிறுர்கள்.

ஷாமாவை கொலை செய்வதற்கான கொந்தராத்தை பொறுப்பேற்றிருந்ததாக நில அளவையாளர் சந்தேகிக்கப்படுகிறுர்.

(த—11)

## லண்டன் டெலிவிஷனில் ஜூலை வன்செயல் படம்

### பொதுமக்கள் கொலையை தடுக்க சர்வதேச மன்னிப்பு சபை கோரிக்கை

கொழும்பு, ஜூன் 19

ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு அமெரிக்க விஜயத்தை முடித்துக் கொண்டு லண்டன் செல்லும் வேளையில் அங்கே டெலிவிஷனில் ஜூலை வன்செயல் படத்தை டெலிவிஷனில் ஒளிபரப்ப பி. பி. சி. நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கிறது.

பொது மக்களை வேண்டுமென்றே ஆயுதப் படையினர் கொலை செய்வதை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை.

இந்த இரண்டு காரியங்களும், இலங்கையின் நற்பெயரைக் கெடுப்பதற்

சோமண்ணை



வைக்கிற பணத்துக்கு கிடைக்கிற வட்டியும், வாங்கிற கடனுக்கு கொடுக்கிற வட்டியும் நேராக வந்தால் தான் பாருங்கோ காரியம் கைகூடும்.

## வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு திரும்புவோருக்கு வங்கியில் கடன் வசதி

கொழும்பு, ஜூன் 18

வெளிநாட்டில் வேலை செய்து விட்டுத் திரும்புவோர் அவர்கள் வங்கியில் வைப்பிலிடும் பணத்தைப் போன்று மூன்று மடங்கு பணத்தைக் கடனாகப் பெற வசதி செய்து கொடுக்கப் படும்.

சுய தொழில்களை ஆரம்பிப்பதற்காகவே இவ்வாறு மும்மடங்கு வங்கிக் கடன் வழங்கப் படும்.

வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தில் ஒரு லட்சம் ரூபாவை வங்கியில் போட்டால் அத்தகையவர் சுய தொழில் ஆரம்பிக்க மூன்று லட்சம் ரூபா கடனாகக் கிடைக்கும்.

வெளிநாட்டில் தொழில் புரிந்து விட்டுத் திரும்புவோர், சுய தொழில் வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்கு தொழில் அமைச்சு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தவிருக்கிறது.

(த-11)

## ஸ்ரீகதிரேசன் கோயில் வழிபாட்டில் பிரதமர்

அனுராதபுரம் அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் நாளை புதன்கிழமை நடைபெறும் பூசை வழிபாட்டில், பிரதமர் திரு ஆர். பிரேமதாச கலந்து கொள்வார்.

"கம் உதாவ" கொண்டாட்டங்கள் சிறப்புற நடைபெறுவதற்காக, நாளை காலை 8–15 மணிக்கு விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெறும்.

# இடதுசாரி தீவிரவாதி உட்பட 18 பேர் கைது

பொது மக்களை வேண்டுமென்றே ஆயுதப் படையினர் கொலை செய்வதை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை.

இந்த இரண்டு காரியங்களும், இலங்கையின் நற்பெயரைக் கெடுப்பதற்காகத் தருணம் பார்த்துச் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

பி. பி. சி. நிலையம், ஜூலை வன்செயல் காட்சிகள் அடங்கிய படத்தை "சிவனின் மக்கள்" என்ற பெயரில் தயாரித்திருக்கிறது. அந்தப் படத்தை இன்று 19ஆம் திகதி டெலிவிஷனில் ஒளிபரப்ப ஒழுங்கு செய்திருக்கிறது.

அதுவும், மக்கள் விரும்பி டெலிவிஷன் பார்க்கும் நேரம் எதுவோ அந்த நேரத்திலேயே ஒளிபரப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

இதற்கு பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச மன்னிப்புச் சபை 75 பக்க அறிக்கை ஒன்றை உலகெங்கும் உள்ள பத்திரிகைகளுக்கு வெளியிட்டு இருக்கிறது. நேற்று வரை அதைப் பிரசுரிக்க வேண்டாம் என்ற வேண்டுகோளுடனேயே சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

அதாவது டெலிவிஷன் படம் ஒளிபரப்பப்படும் இன்று பத்திரிகைகள் பிரசுரிப்பதற்கு ஏற்ற விதத்தில் காலத் தடைக் குறிப்புடன் சர்வதேச மன்னிப்புச் சபை அந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது.

இலங்கை அரசு மனித உரிமைகளை மீறி நடக்கிறதென்று அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறது.

ஆயுதப் படையினரால் பொது மக்கள் வேண்டுமென்றே கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு அரசுக்கு வேண்டுகோளும் விடுக்கப்பட்டு இருக்கிறது.

பி. பி. சி. நிலையம் இருக்கும் லண்டனிலேயே சர்வதேச மன்னிப்புச் சபையின் அடித்தளம் அமைந்திருக்கிறது.

இங்கேதான் தமிழ் ஈழம் கோருபவர்களுள் பலர் இருக்கிறார்கள்.

இலங்கை அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்யும் முயற்சியில் இவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். (உ)

# உட்பட 18 பேர் கைது

## பலாங்கொடையில் வகுப்பு நடத்தினராம்

கொழும்பு, ஜூன் 19

ஓர் இடதுசாரிக் கட்சி தீவிரவாதியும், மற்றும் 17 பேரும், பலாங்கொடைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தடை செய்யப்பட்டுள்ள நவ சமசமாஜக் கட்சி ஆதரவாளர் எனக் கருதப்படும் அந்த தீவிரவாதி, நாசகார நடவடிக்கைகள் பற்றி வகுப்பு நடத்திக் கொண்டிருந்த போது கைதானார் என்று கூறப்படுகிறது.

சில தோட்டத் தொழிலாளர்களும், வேலையற்றிருக்கும் சிலரும் அவ்வகுப்பில் பங்குபற்றியிருந்தனர்.

1980 ஜூலை வேலை நிறுத்தத்தினால் வேலையிழந்த ஒருவரின் வீட்டில் வகுப்பு நடைபெற்றதாம்.

பிரஸ்தாப தீவிரவாதி கைது செய்யப்பட்ட சமயம் பல நாசகார பிரசுரங்கள், ந. ச. ச. கட்சிச் செய்தி மடல் உருமயா, மற்றும் பல புத்தகங்கள் அவரிடம் இருந்தன என்று பலாங்கொடைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலீஸ் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளார்.

வகுப்பில், அருகாமையில் உள்ள ஒரு தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பெண் தொழிலாளிகளும் பங்குபற்றி இருந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

வகுப்பு நடத்திய அந்த இடதுசாரிக் கட்சி தீவிரவாதி, கொழும்பில் வசிப்பவர். ஆனால்; அவரது குடும்பம் லண்டனில் வசிக்கிறது. அவர்களின் லண்டன் முகவரியும் பொலீஸ் தலைமையகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (க)

"கம் உதாவ" கொண்டாட்டங்கள் சிறப்புற நடைபெறுவதற்காக, நாளை காலை 8-15 மணிக்கு விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெறும்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த வழிபாட்டில் கலந்து கொள்வர் என ஆலய முகாமையாளர் திரு. ம. கணேசமூர்த்தி அறிவித்திருக்கிறார். (க)

# குழந்தைகளை கிணற்றில் தள்ளி விட்டு தாமும் பாய்ந்த தாயார்

## வடக்கில் மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சீதன தகராறு காரணமாக ஒரு தாயாரும், இரு குழந்தைகளும் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் வட்டுக்கோட்டை, செம்பாட்டுத் தோட்டத்தில் நடந்தது.

திருமதி பாலுசாமி அற்புதமலர் என்ற 34 வயது பெண்ணே தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

அருஞ்சலா என்ற 10 வயது மகளையும், மதனு என்ற 1½ வயது மகளையும் அற்புதமலர் முதலில் கிணற்றினுள் தள்ளினாராம். பின்னர், தாமும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

காங்கேசன்துறை பொலீஸார் சடலங்களை மீட்டு யாழ். அரசாங்க வைத்தியசாலையில் பொறுப்பு கொடுத்தனர்.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

மரண விசாரணையில், இறந்த பெண்ணின் கணவர் பாலுசாமி, இறந்தவரின் தந்தை மு. கணபதி (65 வயது), அவரது சகோதரர் கே. தியாகராசா ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

விசாரணையின் போது, கணவர் சீதனப் பணத்தைக் கேட்டு, மனைவிக்குத் தொல்லை கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-க-120)

1983 ஜூலை வன்செயல் வழக்கு:

# வீட்டைச் சேதப்படுத்திய நால்வருக்கு தலா 10 வருட கடூழியச் சிறை

அவிசாவளை, ஜூன் 18

கடந்த ஜூலை மாத இனக் கலவரத்தின் போது, தமிழர் ஒருவரின் வீடொன்றைக் கொளுத்தி, சேதப்படுத்திய நால்வருக்கு தலா 10 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அவிசாவளை மேல் நீதிமன்ற நீதிபதி திரு. நெவில் விஜேரத்ன இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

இனக் கலவரம் தொடர்பாக விசாரிக்கப்பட்ட முதலாவது வழக்கு இதுவாகும்.

இவ்வழக்கில் மிரிஸ்வத்தையைச் சேர்ந்த கே. விஜேரத்ன, டபிள்யூ. சிரிபால, எல். ரணசிங்க, வி. ஜயத்திலக்க ஆகியோர் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்

கொஸ்கம பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மிரிஸ்வத்த, எஸ்லவத்த என்னும் இடத்தில் வசித்த என். கனகசபை என்பவரின் வீடு, கடந்த வருடம் ஜூலை 23ஆம் திகதி கொளுத்தப்பட்டது.

அன்றைய தினம் மாலை 5-00 மணியளவில் ஜயத்திலக்க என்பவர் வந்து வன்செயல் தொடங்கப் போவதாகத் தெரிவித்தார். கனகசபை, தனது மனைவி, பிள்ளைகளுடன், வீட்டுக்குப் பின்னாலுள்ள றப்பர் தோட்டத்துக்குள் சென்று ஒளிந்து கொண்டார்.

அடுத்து அங்கு ஒரு கும்பல், கத்தி, பொல்லு, வாள் சகிதம் வந்தது. அவர்களுள் ஜயத்திலக்க விஜேரத்ன, சிரிபால, ரணசிங்க ஆகிய எதிரிகள், கத்தியபடி வீட்டுக்குள் புகுந்தனர். பின்னர் வீடு சுவாலை விட்டு எரிந்தது. இதனால் 3,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

எதிரிகள் இக்குற்றச்சாட்டை மறுத்தனர்.

இப்படியான ஒரு சம்பவத்தினால் முழு சிங்கள சமூகத்துக்கும் அவமானம் ஏற்படுத்தப்பட்டது. வெளிநாட்டவர்களின் கண்களுக்கு இச்சம்பவங்கள் கண்டனத்துக்கு உரியனவாகவும், வெட்கக் கேடானவையாகவும் தெரிந்தன. ஆனபடியால் குற்றத்துக்கு ஏற்ற தண்டனை வழங்கப்பட வேண்டும். அதனால் எதிரிகளுக்கு தலா 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கிறேன் என மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு அளித்தார்.

சட்டத்தரணிகளான திரு. ஜயதிஸ்ஸ, திரு. விக்கிரமபத்து ஆகியோர் எதிரிகளுக்காக ஆஜராகினர்.

அரச தரப்பில் திரு. கந்தவால் குமாரசிரி ஆஜரானார்.

பெலியத்த பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. நவின் அழகக்கூன் இவ்வழக்கு சம்பந்தமான புலன் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (க)

## நோன்பு தொழுகை நேரம்

19—6—1984

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.20 |
| ஸுபஹு | — காலை | 4.35 |
| சூரிய உதயம் | — காலை | 5.55 |
| லுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பிற்பகல் | 3.39 |
| மஃரிப் | — மாலை | 6.27 |
| இஷா | — இரவு | 7.47 |

# உதவித் தொகை ரூ. 1,000 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 18

களுத்துறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கராவின் சிபார்சின் பேரில் சமூக சேவைகள் அமைச்சினால் இந்த பணம் வழங்கப்படும்.

அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் இதனை பத்திரிகையாளர்களிடம் நேற்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித் தொகையாக இப்பொழுது ரூ. 500 மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

இத்தொகை ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என திருமதி விமலா கன்னங்கரா சிபார்சு செய்திருந்தார். (த-ய)

# ஹாரகாமம் வீதி வெள்ளத்தில்

கொழும்பு, ஜூன் 19

விக்டோரியா நீர்த் தேக்கம் நிரம்பி வழிவதால் ஹாரகாமம் வீதி நீரில் மூழ்கி இருக்கிறது.

ஹாரகாமம் வீதியூடாக கண்டி, ஹங்குரன்கெத்தை மார்க்கமாக நுவரெலியா செல்லும் வாகனங்கள் தலாத்துஓயா கந்தசந்தி வழியாக திசை திருப்பி விடப்பட்டிருக்கின்றன. (த-11)

# ஆசிரியர்களுக்கும் ஓவர் டைம்

## தயாரத்ன கமிஷன் சிபார்சு

கொழும்பு, ஜூன் 19

கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு ஓவர் டைம் வழங்கப்படும்.

ஆசிரியர்கள் சிலர் மாணவர்களின் வருடாந்த பாடத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்காக தமது கடமை நேரத்தின் பின்னரும் வகுப்புகளை நடத்துகின்றனர்.

அதே போன்று பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்காக கடமை நேரத்தின் பின்னர் ஆசிரியர்கள் சிலர் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கின்றனர். இப்படியானவர்களுக்கு இதுவரை ஓவர் டைம் வழங்கப்படுவதில்லை.

மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைக்கும் ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் முகமாக அவர்கள் மேலதிகமாக பணிபுரியும் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கு 5 ரூபா முதல் 10 ரூபா வரை ஓவர் டைம் வழங்க வேண்டுமென வும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (த-ய)

# அவசர கால சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 18

அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது.

இந்த உத்தரவு வாஷிங்டனில் இருந்து பிறப்பிக்கப்பட்டதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி தற்பொழுது அமெரிக்காவில் விஜயம் மேற்கொண்டிருப்பது, தெரிந்ததே. (த-மு).

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

## கூட்டுறவு உதவி நிதியம்

கொழும்பு, ஜூன் 19

நட்டத்தில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிக்கும்முகமாக ஐந்து கோடி ரூபாவில் "கூட்டுறவு உதவி நிதியம்" ஒன்று அமைக்கப்படும்.

விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித்துறை, உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. காமினி ஜயசூரியவின் ஆலோசனையின் பேரிலேயே இந்த நிதியம் அமைக்கப்படுகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணத்தால் உதவி செய்வது, அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விலைக்கு வாங்குவதற்கு பிணையாக நிற்பது, போன்றவற்றுக்குப் பயன்படுத்தவே இந்நிதியம் அமைக்கப்படுகின்றது.

கூட்டுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். (எ—11)

## குடும்பஸ்தர் தற்கொலை

கிளிநொச்சி, ஜூன் 18

தீராத நோயினால் அவஸ்தைப்பட்டு வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது மனைவியையும் மூன்று குழந்தைகளையும் தவிக்கவிட்டு கிருமிநாசனி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இப் பரிதாப சம்பவம் கிளிநொச்சி பொலீஸ் பிரிவில் உள்ள கண்டாவளையில் நடைபெற்றது.

கந்தூர் பத்மநாதன் என்பவரே (31 வயது) இவ்வாறு மரணமானார்.

இவரது மரண விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் நடத்தினார். (எ–244)

இரவு வேலைகளில் பெண்கள்

# 7 நிபந்தனைகளை அனுசரிக்க உத்தரவு

கொழும்பு, ஜூன் 19

இரவு வேலையில் பெண்களைக் கடமையில் ஈடுபடுத்தும் தொழில் அதிபர்கள், ஏழு நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும்.

தொழில் அமைச்சு தயாரித்துள்ள ஒரு சட்டவரைவில் இது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தொழில் சட்ட விதிகளை மாற்றி அமைப்பதற்கான இந்தச் சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

★ பெண்களை இரவில் கடமையில் ஈடுபடுத்துவதற்கு, தொழில் ஆணையாளரின் அனுமதி பெறல் வேண்டும்.

★ இரவு சேவையில், பெண்களை வற்புறுத்தி நிறுத்தக் கூடாது. அவர்களின் விருப்பத்தை எழுத்தில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

★ பகல் சேவையில் ஈடுபடும் பெண்களை இரவுச் சேவையில் ஈடுபடுத்தக் கூடாது.

★ அதிக சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

★ மாதத்துக்கு 10நாட்களுக்கு மேல் இரவுச் சேவையில் ஈடுபடுத்தக் கூடாது.

★ அவர்கள் உணவு உட்கொள்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் அறையொன்றை ஒதுக்க வேண்டும்.

★ உணவு தேநீர் போன்றவற்றை வழங்க வேண்டும்.

மேற்படி ஏழு நிபந்தனைகளையும், தொழில் அதிபர்கள் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும். (எ–11)

## பிரதமர் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள்

கொழும்பு, ஜூன் 19

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இம் மாதம் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை விசேஷ வைபவங்கள் பல நடைபெறவிருக்கின்றன.

மத்திய கொழும்பு கிராண்ட்பாஸ் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையின் ஏற்பாட்டில் கெத்தாராம விகாரையில் மேற்படி வைபவங்களை நடத்துவதற்கு கொழும்பு நகரசபைத் தலைவர் திரு. டி. எம். சங்கதாஸ நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இரத்ததானம், அறுபது பறவைகளைப் பறக்கவிடுதல், ஆயிரம் சிறுர்களுக்குப் பால் விநியோகம் செய்தல், பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குதல் , மரம் நடுதல், பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்தல், தினமும் இரவில் தர்ம உபந்நியாசங்களை நடத்துதல் போன்ற பல்வேறு அம்சங்கள் நடைபெறவிருக்கின்றன.

மேற்படி வைபவங்களில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பிரதம அதிதியாக கலந்து கொள்வார். (எ–11)

## சம்பள உயர்வு கோரி தோ. தொழிலாளர் தந்தி

அப்புத்தளை, ஜூன் 19

தமது சம்பளத்தை உயர்த்தும்படி கோரி, தோட்டத் தொழிற்துறை ஊழியர்கள் தனித் தனியாக பெருந் தோட்டத்துறை அமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜேரத்னவிற்கு தந்தி அனுப்பி இருக்கின்றனர்.

தந்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

தோட்டச் சேவையாளர்களின் சம்பளம் கடந்த பல வருடங்களாக உயர்த்தப்படவில்லை.

இதனால் எமது வாழ்க்கைத் தரம் உயர்வது தடைப்படுகிறது.

ஏனைய தொழிலாளர்கள் மத்தியில் எம்மால் தலை நிமிர்ந்து வாழ முடியவில்லை.

நிர்வாகத் துறையில் உள்ள சேவையாளர்களின் சம்பளம் இதுவரை உயர்த்தப்படவில்லை.

நிர்வாகத்துறையில் உள்ள சேவையாளர்களின் சம்பளம் உடனடியாக அதிகரிக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (எ–100)

## களவுபோன வைரக் கற்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 19

"சீதுவ பகுதியில் உள்ள "புளூ டயமன்ட்" கம்பனியில் இருந்து கடந்த வருடம் களவு போன வைரக் கற்கள் தொடர்பாக விசாரணை நடத்திய சீதுவப் பொலீஸார் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நீல நிற வைரக் கற்களை கைப்பற்றியிருக்கின்றனர்.

மினுவாங்கொடைப் பகுதியில் இருந்து மேற்படி வைரக் கற்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மேற்படி கம்பனியிலிருந்து பெருமளவு வைரக் கற்கள் களவு போனதாக சீதுவ பொலீஸாருக்குப் புகார் செய்யப்பட்டது.

சீதுவ பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. உபாலி ரணசிங்க, இரத்தினக் கல் வர்த்தகர் போன்று மாறுவேடத்தில் சென்றே வைரக் கற்களைக் கைப்பற்றினர்.

சுமார் 40 நீல நிற கற்களை மினுவாங்கொடைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து அவர் கைப்பற்றினர்.

இது தொடர்பாக பிரஸ்தாப வீட்டிலிருந்த இருவர் சந்தேகத்தின் பேரில் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். (எ—ர)

## வீடமைப்புத் திட்ட நடவடிக்கைகளைக் கவனிக்க 173 கிராமோதய சபைகள்

கொழும்பு, ஜூன் 19

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் பத்து லட்சம் வீடமைப்புத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அனுராதபுர மாவட்டத்தில் 173 கிராமோதய சபைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினலேயே மேற்படி கிராமோதய சபைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் இப்பகுதியிலுள்ள 17 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ளவர்களுக்கு ரூபா 82,23788.60 கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளன.

இங்கு நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு மாதிரிக் கிராமங்களிலும் 2, குழாய்க் கிணறுகள், விளையாட்டு மைதானம், சனசமூக நிலையம், பாடசாலை போன்றன நிறுவப்படும்.

இதற்காகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றிடமிருந்து உதவிகள் பெறப்பட்டிருக்கின்றன. (எ—ர)

தினபதி சிறு விளம்பரம்

### ஆசிரியர் தேவை

க. பொ. த. (சா .த.) அல்லது (உ. த.) சித்தியடைந்துள்ள தமிழில் கற்பிக்கக்கூடிய முஸ்லிம், தமிழ், ஆசிரியர்கள் தேவை. கொழும்பை சுற்றியுள்ளவர்களுக்கு

## சூழல் பாதுகாப்பு அபிவிருத்திக்கு உயர் அதிகாரிகள் கமிட்டி

கொழும்பு, ஜூன் 19

மகாவலி நீர்த் தேக்கங்கள், கால்வாய்கள் உட்பட மகாவலி குடியேற்றப் பகுதிகளிலும் புதிய மகாவலி நகரங்களிலும் சூழல் பாதுகாப்புக்களை அபிவிருத்தி

பணிப்பாளர் நாயகம் திரு. என். ஜீ. பீ. பண்டிதரத்ன தலைமையில் அண்மையில் கூட்டமொன்று நடைபெற்றது- அந்தக் கூட்டத்திலேயே மேற்படி கமிட்டியை நியமிப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியை மூடும் முயற்சி: அதிகாரிகள் சிலரே தூண்டுகோள்

வவுணதீவு, ஜூன் 18

மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரியை மூடுவது குறித்து எடுக்கப்பட்ட முடிவுக்கு இங்கு கடமையாற்றும் ஒரு சில அதிகாரிகளே தூண்டுகோலாக இருந்தனர்.

அவர்கள் அனைவரையும் இவ்வலுவலகத்தில்

### தேவநாயகம் குற்றச்சாட்டு

கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் இவ்வாறு கூறினர்-

அவர் தொடர்ந்து பேசுகையில், பல எதிர்ப்புகளுக்கும்,

ஆகியோரோடு இணைந்து தாம் ஜனதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த முடிவை மாற்றச் செய்தோம்-

வெகு விரைவில் மட்டக்

அரசாங்க தட்டெழுத்தாளர்/ சேவையின் II ஆம் வகுப்பு "அ" பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான ரூபா 11400/– சம்பளப் படி நிலைக்கு முந்திய வினைத் திறமை காண் தடைப் பரீட்சை ஜூன் 1984.

ரன். 629

84.6.23 ஆந் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சை சார்

தமிழ், ஆசிரியர்கள் தேவை. கொழும்பைச் சுற்றியுள்ளவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். சுய விலாசமிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். செயலாளர், உயர் ஆசிரியர்களின் சபை, 16/3/பி, தேசிய வீடமைப்பு, கிரிபத்கொட, களனிய.


## அரிசி ஆலை

ஆகக் கூடுதலான கோட்டா வசதியுடன் சகல வசதிகளையும் கொண்ட அரிசி ஆலை குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. சிபானி ரைஸ் மில், அல் ஹிரா மாவத்தை, கொட்டருமுல்லை. தொலைபேசி: 031/2197.

வி. இ. 035704


## அரசாங்க அறிவித்தல்

எனதிலக்கம்: 3/2/5/5/1085
1984—06—04

கம்பஹா மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில்.

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்**

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விவரங்கட்கு 1984ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 6ஆம் திகதி 300/9 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

உப அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:— ஜா-எல.

கிராமம் அல்லது ஊர்:— தலதொல்ல.

அமைப்பு:— பிரிவு இல. 5 ருகும நகர சபை எல்லையிலுள்.

காணியின் பெயர்:— 1 — 75.

நில அளவைப் பட இலக்கம்:— கம். 347

நிலத் துண்டிலக்கம்:— ...

ஏ. எல். எஸ். மல்வன்ன,
கம்பஹா மாவட்டக் காணி அலுவலகர்.

1494

களிலும் புதிய மகாவலி நகரங்களிலும் சூழல் பாதுகாப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கும், அவற்றை நிர்வகிப்பதற்கும் உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய கமிட்டி ஒன்று நியமிக்கப்படும்.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மகாவலி அதிகார சபையின் தக் கூட்டத்திலேயே மேற்படி கமிட்டியை நியமிப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்படி, விரைவில் நியமிக்கப்படும் "மகாவலி சூழல் பாதுகாப்பு கமிட்டி" மகாவலி பகுதிகளின் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மேற்படி தகவலை தினபதிக்குத் தெரிவித்தார்.

(எ-11)

அவர்கள் அனைவரையும் இவ்வளாகத்தில் இருந்து அகற்றி விட்டு, நிர்வாகத் திறமை மிக்க நேர்மையான அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய உள்நாட்டலுவல்

அவர் தொடர்ந்து பேசுகையில், பல எதிர்ப்புகளுக்கும், கஷ்டங்களுக்கும் மத்தியில் மட்டக்களப்பு பல்கலைக் கழகம் திறக்கப்பட்டது. இதனை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மூடுவதற்கு இடம் கொடுக்க மாட்டோம்.

இங்கு கடமையாற்றும் அதிகாரிகள் சிலரின் நடவடிக்கைகளால் இங்கு பல அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. அதனால் இவ்வளாகத்தை மூடிவிடும் நிலை ஏற்பட்டது.

இப்பல்கலைக் கழகத்தில் இயங்கும் விவசாய பீடத்தை மூடி, யாழ். பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. இராசதுரை, கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. தொண்டமான்

செய்தோம்.

வெகு விரைவில் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தை சகல வசதிகளும் கொண்ட ஒரு தேசிய பல்கலைக் கழகத்தின் அந்தஸ்திற்கு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எனவே மட்டக்களப்பு பல்கலைக் கழகம் மூடப்பட்டு விடுமோ என்ற அச்சம் உங்களுக்கு ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு திரு. தேவநாயகம் கூறினார்.

(ய-318)

ரன். 629

84.6.23 ஆந் திகதி நடைபெற உள்ள மேற்படி பரீட்சை சார்பான அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அஞ்சல் செய்யப்பட்டுள்ளன என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

காரியவசம்
பிரக்ஞாதாச
பரீட்சை ஆணையாளர்

5/10/21
கொழும்பு - 2
6. 6. 84

வி. இ. 1548

# உள்ளூர் பாய் உற்பத்தி பெருமளவு பாதிப்பு

## பிளாஸ்டிக் பாய் உற்பத்தியே காரணமாம்

கொழும்பு, ஜூன் 19

இலங்கையில் பிளாஸ்டிக் பாய் உற்பத்தி செய்யப்படுவதால், உள்ளூர் கோரைப் புற் பாய் உற்பத்தி பெருமளவு பாதிப்படைந்துள்ளது.

பிளாஸ்டிக் பாய் உற்பத்திக்கான மூலப் பொருள்களையும்; உபகரணங்களையும் இறக்குமதி செய்யப் பெருமளவு அந்நியச் செலாவணி வீணாக்கப்படுகிறது.

ஆனால், உள்ளூர் கோரைப் புற் பாய் உற்பத்திக்கான மூலப் பொருட்களை மலிவான விலையில் பெறக் கூடியதாக இருக்கிறது.

விஞ்ஞான கைத்தொழில் துறை அமைச்சின் உள்ளூர் உற்பத்தி ஆலோசனைக் குழு மேற்படி பிளாஸ்டிக் பாய் உற்பத்திக்கான மூலப் பொருட்களையும், உபகரணங்களையும் இறக்குமதி செய்ய அனுமதியளித்திருக்கிறது.

இந்நடவடிக்கை நிதி அமைச்சின் புதிய இறக்குமதித் திட்டத்திற்கு முரணானதாகும் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய புதிய பிளாஸ்டிக் பாய் உற்பத்தியினால், உள்ளூர் பாய் உற்பத்தியாளர்கள் தமது வருமானத்தை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-ர)

## விக்டோரியா நீர்த்தேக்கத்தில் படகுச் சேவை

கொழும்பு, ஜூன் 19

நீர் நிறைந்து மிகவும் அழகிய சுற்றாடலுடன் காட்சி தரும் விக்டோரியா நீர்த்தேக்கத்தைப் பார்வையிடச் செல்லும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்காக விசேட படகுச் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஐந்து மோட்டார் படகுகள் இச் சேவையில் ஈடுபடுத்தப்படும். காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை வாரநாட்களிலும் விடுமுறை நாட்களிலும் இச் சேவை நடத்தப்படும்.

மகாவலி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் மேற்படி படகுச் சேவைக்காக செலவாகும் செலவினங்களை சமாளிப்பதற்கு, உல்லாசப் பிரயாணிகளிடமிருந்து சிறு தொகை கட்டணத்தை அறவிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மேற்படி தகவலை "தினபதி"க்குத் தெரிவித்தார்.

(ப-11)

# கர்ப்பிணிகளுக்கு இடையூறு விளைவித்ததாக புகார்

## பூரண விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 19

பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்த கர்ப்பிணிகளுக்கு ரபான், மத்தளம் போன்ற வாத்தியங்கள் மூலம் ஒலி எழுப்பி இடையூறு செய்ததாகக் கூறப்படும் ஒரு புகார் சம்பந்தமாக, பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த பொசன் பௌர்ணமி தினத்தன்று கொழும்பு டி சொய்சா பெண்கள் பிரசவ விடுதிச் சுற்றாடலில் பௌத்த பிரித் ஓதும் வைபவம் அனுஷ்டிக்கப்பட்டது.

அப்போதே, அங்கு ரபான், மத்தளம் போன்ற வாத்தியக் கருவிகளை உபயோகித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தி, பிரசவ வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்த தாய்மாருக்கு சிலர் இடையூறு செய்ததாகப் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மகளிர் வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் டாக்டர் திரு. தயா சமரசிங்க சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று ஆஸ்பத்திரிச் சுற்றாடலில் நோயாளருக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடக்காது அமைதியான முறையில் பிரித் ஓதும் வைபவத்தை நடத்தும்படி வேண்டினார்.

அதை அங்கிருந்தவர்கள் அசட்டை செய்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் வாத்தியங்கள் மூலம் ஓசை எழுப்பி விடியும் வரை நோயாளருக்கு இடையூறு விளைவித்தனராம்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் மீது, திரு. தயா சமரசிங்காவின் முறைப்பாட்டின் பேரில் உயர்மட்ட விசாரணைகள் நடத்தப்பட இருக்கின்றன.

(ஏ-ரூ)

## தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 19

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்து தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதி தொழில் அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

ஊழியர்களின் தொழில் உரிமைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், தொழிலாளர்களின் சட்டதிட்டங்கள் போன்ற பல விடயங்கள் குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேசி, பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணுவதே இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

கடந்த மாதம் நடைபெற்ற ஒரு தொழிற்சங்க மாநாட்டில் தொழில் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அடிக்கடி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே மூன்று மாதத்துக்கு ஒருமுறை இத்தகைய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குப் பிரதி தொழில் அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

(ய-213)


## பிறந்த நாள் வாழ்த்து



செல்வப் புதல்வன் மொஹமட் ஷிFபாஸ்
[19 — 06 — 1984]

கொழும்பு — 13, மகா வித்தியாலய மாவத்தை, 36/203ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மிஸ்றுல் அஸார் — பைரூஸ் பேகம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் மொஹமட் ஷிFபாஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (19 — 06 — 1984) குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை டடா, மம்மி, அப்பாமார், வாப்பம்மா, காத்தூன் உம்மா, அபுல் ஹஸன் மாமா, நஸீம் நிஸா மாமி, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சாச்சா, சாச்சி, மச்சான்மார், மதினிமார், ரோஸி, றிஸானா, றியாஸா, றிபாஸா, மும்தாஸ், ரோஸான், சுவீடி, பவாஸ் றுஸான், றிஸ்மி, பர்ஸான், றில்பாஸ், சர்பாஸ், நப்றாஸ், ஹனிபா ஆகியோரும் மற்றும் யாழ்ப்பாணம் பஜார் லேனைச் சேர்ந்த மபாஸ், சானுஸ் ஆகியோரும் இவரை அல்லாஹ்வின் அருளால் அறிவும், ஆற்றலும் பெற்று றமழான் மாதத்தின் பொருட்டினால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

வி. இ. 035505

# பள்ளியில் படிக்கும்போது காதல் அனுபவம் உண்டா?

## விஜயகாந்—நளினி பேட்டி

இன்றைய தமிழ் பட உலகில் முன்னணி நட்சத்திரங்களாக திகழ்பவர்கள் விஜயகாந்த் நளினி. இருவரும் அதிக படங்களில் ஜோடியாக நடிக்கிறார்கள்.

நளினியை விஜயகாந்த் சந்தித்துப் பேட்டி கண்டார்.

விஜய்: சினிமா துறைக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?

நளினி:— "ஜஸ்ட் அன் ஆக்சிடெண்ட்" நான் பள்ளிக் கூடத்துக்கு போய்ட்டு வரும் போது வழியில் டி. ராஜேந்தர் என்னை தற்செயலாக பார்த்திருக்கிறார். பிறகு என்னை பற்றி விசாரித்து அப்பாவிடம் வந்து என்னை சினிமாவில் நடிக்க வைக்க அனுமதி கேட்டார். அப்பாவும் நான் சினிமாவில் நடிக்க சம்மதம் தெரிவித்தார். இது தான் நான் சினிமாவில் நடிக்க வந்த கதை.

விஜய்:— அதிக படங்களில் உங்களுடன் ஜோடியாக நடிக்கும் நடிகர் யார்?

நளினி:— இன்னும் நான் அதிக படங்களில் நடிக்கவில்லையே...... இருந்தாலும், இப்போது நான் நடிக்கும் படங்களில் நீங்களும் (விஜயகாந்தும்), மோகனும் அதிக படங்களில் எனக்கு ஜோடியாக நடிக்கிறீர்கள்.

விஜய்:— எந்த நடிகருடன் ஜோடியாக நடிப்பது உங்களுக்கு பிடித்திருக்கிறது?

நளினி:— இது சிக்கலான கேள்வி. எல்லா நடிகர்கள் கூடவும் நடிக்க ஆசைப்படுகிறேன்.

விஜய்:— உங்களை அறிமுகப் படுத்திய டி. ராஜேந்தர் படத்தில் நடிக்க நீங்கள் சரியாக "கால்ஷீட்" கொடுக்கவில்லை என்று கூறப்பட்டதே...?

நளினி:— அது அத்தனையும் பொய். இந்த கேள்வியை நீங்கள் ராஜேந்தர் சாரை கூட வைத்துக் கொண்டு கேளுங்கள் பொய் என்று அவரே சொல்லுவார்.

விஜய்:— இந்திப் படத்தில் நடிக்கிறீர்களா?

நளினி:— இப்போதைக்கு இல்லை.

விஜய்:— யாரோ ஒரு ஒளிப் பதிவாளரை திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்று வதந்தி நிலவியதே உண்மையா?

நளினி:— இது வரைக்கும் இல்லை, இனிமேல் என்ன நடக்குமோ தெரியாது.

விஜய்:— படத்தில் நடிக்க ஒப் மாதிரி கேள்வி கேக்குறீங்களே? அப்படி எல்லாம் ஒன்றும் இடையாது. நீங்கள் சொன்ன மாதிரி எந்த பேப்பரிலும் நான் படிக்கலை.

விஜய்:— உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா?

நளினி:— இல்லை.

விஜய்:— பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது......?

நளினி:— (சிரித்துவிட்டு) அப்போது கூட கிடையாது.

விஜய்:— எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?

நளினி:— (கேலியாக சொல்கிறார்.) இன்னும் முடிவு செய்யவில்லை. எனக்கு திருமணம் நடக்கிற போது உங்களுக்கு கண்டிப்பாக பத்திரிகை அனுப்புகிறேன்.

விஜய்:— உங்கள் திருமணம் காதல் திருமணமாக இருக்குமா?

நளினி:— காதலிச்சு, வீட்டார் சம்மதத்தோடு நடக்கும்.

விஜய்:— அரசியலில் ஈடுபடுவீர்களா?

நளினி:— சினிமாவையே இன்னும் சரியாக கற்றுக் கொள்ளவில்லை. பிறகு ஏன் அரசியல்?

விஜய்:— 100 ஆவது நாள் படத்தில் விபரீதமான கனவுகளை கண்டு, பயத்தால் அலறுகிறீர்கள். நிஜ வாழ்க்கையில் உங்களுக்கு கனவு வருவதுண்டா? எப்படிப்பட்ட கனவுகளை காண்கிறீர்கள்?

நளினி:— 100 ஆவது நாள் படத்தில், அந்த குறிப்பிட்ட கனவு காட்சியில் நடித்த அன்று இரவில் அதே மாதிரி கனவு வந்தது அவ்வளவு தான். அதற்கு முன்பும், பின்பும் நான் கனவு கண்டதில்லை.

விஜய்:— இதுவரை என்னுடைய கேள்விகளுக்கு பதில் சொன்னதற்கு நன்றி.

தொடர்ந்து நளினி விஜய்காந்திடம் சில கேள்விகளை கேட்டார். அதற்கு விஜய்காந்த் பதில் சொன்னார்.

நளினி:— என்னிடம் கேள்வி கேட்டீர்கள் பதில் சொன்னேன். நானும் உங்களை சில கேள்விகள் கேட்கலாம் அல்லவா?

விஜய்:— தாராளமாக கேளுங்கள்.

நளினி:— படத்துக்கு தேவை இல்லை என்றால் கூட "4, 5 சண்டைக் காட்சிகள் எனக்கு வேண்டும்" என்று பட இயக்குநர்களிடம் வற்புறுத்துகிறீர்களாமே — உண்மையா?

விஜய்:— அது என்னுடைய விருப்பம் இல்லை. பட விநியோகஸ்தர்களின் விருப்பம். நான் நடிக்கும் படங்களில் சண்டைக் காட்சிகள் இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

இப்போது "சபாஷ்" என்னும் படத்தில் நடித்து வருகிறேன். நியாயமாக அந்தப் படத்தில் சண்டைக் காட்சியே தேவை இல்லை ஆனாலும் விநியோகஸ்தர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய அந்த படத்தில் சண்டை காட்சிகளை சேர்த்திருக்கிறார்கள்.

அதே போல "ராமன் ஸ்ரீ ராமன்" என்று ஒரு படம் சண்டை காட்சி இல்லாமலேயே முடித்து விட்டனர். ஆனால் இப்போது "பைட் வேண்டும் என்கிறார்கள்.

(ல—10)



நவீன வசதியுடன்

# மட்டக்களப்பில் ஆயிரம் ஏக்கரில் மாட்டுப் பண்ணை

## இராசதுரையின் திட்டம்

கொழும்பு, ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், நவீன வசதிகளுடன் கூடிய ஒரு மாட்டுப் பண்ணை அமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை மேற்கொண்டு வருகிறார்.

உன்னிச்சை, தும்பலாஞ்சேனை, குதம்பா ஆகிய பகுதிகளை உள்ளடக்கி, ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு மாடு வளர்க்கும் பெரும் பண்ணையை ஆரம்பிப்பதே அமைச்சரின் நோக்கமாகும்.

இது சம்பந்தமாக, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானோடு அவர் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இதற்கான நில ஒதுக்கீடுகளையும், வரைபடங்களையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு, மேலதிக மாகாண அதிபர் திரு. செல்வரத்தினத்தை அமைச்சர் திரு. இராசதுரை கேட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியோடு இப்பெரும் பண்ணை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இதனால் உன்னிச்சை, ஆயித்தியமலை, கரடியனாறு, இராஜபுரம், மரப்பாலம் ஆகிய இடங்களிலுள்ள சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையும்.

இவ்விடங்களைப் பார்வையிடுவதற்காக இந்த வாரக் கடைசியில், இத்துறையில் மிகுந்த அனுபவம் பெற்ற இலங்கைப் பிரதிநிதிகளும், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் உயர்தர அதிகாரிகளும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் உயர்தர அதிகாரிகளும் மட்டக்களப்புக்கு வருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகோள்

மருதமுனை, ஜூன் 19

"நாட்டில் நீதி, நேர்மை, சாந்தி, சமாதானம், இன ஒற்றுமை என்பன ஏற்பட தினமும் மாலை 6.15ந்திலிருந்து 6.30 வரை பிரார்த்தனை புரியவும்"

கல்முனை வை. எம். சீ. ஏ ஸ்தாபனத்தார், நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள சகல வை. எம். சீ. ஏ. கிளை ஸ்தாபனங்களுக்கும் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

"இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இறைவழிபாடுகள், பிரார்த்தனைகள்

## நல்லின காளை மாடுகளால் பயன் பெறலாம்

### அரசாங்க அதிபர் விளக்கம்

தலைமன்னார், ஜூன் 18

"கால்நடை வளர்ப்போர் பல மாடுகளை வைத்து பராமரிப்பதை விட ஒரு நல்ல இனப் பசு மாட்டை வளர்த்து வந்தால் பெரும் நன்மையுண்டு. நல்லின பசுமாடு இல்லாக் குறையைப் போக்க நல்ல இன காளை மாடுகள் இறக்குமதி செய்யப்படுகின்றன"

மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் இவ்வாறு கூறினார்.

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அண்மையில் உயிலங்குளத்தில் திறந்து வைக்கப்பட்ட கால்நடை சந்தை திறப்பு விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து

நல்லின பசுக்களை இறக்குமதி செய்வதைவிட, நல்லின காளை மாடுகளை இறக்குமதி செய்வதன் மூலம் நல்லின மாடுகள் பெருக்கம் ஏற்படும். இதனால் தான் நல்ல இன காளை மாடுகள் 'இறக்குமதி செய்யப்படுகின்றன" என்றார்.

திட்டமிடல் பணிப்பாளர் திரு. ஜெயரட்ணம் பேசுகையில்,—

"மன்னார் பகுதியில் இரண்டு மிருக வைத்திய நிலையங்கள் தான் இருக்கின்றன. இவற்றை மேலும் அதிகரிக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இக்கால்நடைச் சந்தையை பல ஆயிரம் ரூபா செலவில் பெரிதாக அமைத்து பயன் பெற வேண்டும். இச்சந்தையை பெரிய சந்தையாக உருவாக்க உங்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

பால் சேகரிப்பு வாகனங்கள் தற்போது பாலம்பிட்டி, அடம்பன், சிலாபத்துறை, இலுப்பைக்கடவை ஆகிய நான்கு பாதைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதனால் அதிகளவு பாலை சேகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன" என்றார்.

(ல—286)

மின்சாரம், தொலைபேசி:

## திருத்த வேலைக்கு ரூ. 200 கோடி தேவை

கொள்ளப் போகிறீர்கள் என்று வதந்தி நிலவியதே உண்மையா?

நளினி:— இது வரைக்கும் இல்லை, இனிமேல் என்ன நடக்குமோ தெரியாது.

விஜய்:— படத்தில் நடிக்க ஒப்பந்தமாகும் போது ஒரு ரேட்டும் "கால்ஷீட்" கொடுக்கும் போது அதைவிட கூடுதலாகவும் பணம் கேட்கிறீர்களாமே?

நளினி:— இது முழுப் பொய். நான் அப்படி செய்தால், அந்த பட நிறுவனங்கள் என்னை தங்கள் அடுத்த படங்களில் நடிக்க வைக்குமா? இப்போது நான் நடித்துக் கொண்டிருக்கும் படங்களை பார்த்தாலேயே அது தெரியும். முன்பு என்னை வைத்து படம் தயாரித்த பல நிறுவனங்கள் இப்போதும் "புக்" செய்கின்றன. இதில் இருந்தே உங்களுக்கு தெரியுமே, அதெல்லாம் வதந்தி என்று.

விஜய்:— எந்த சந்தர்ப்பத்திலாவது திரை உலகை விட்டு விலகிவிட வேண்டும் என்று நினைத்தது உண்டா?

நளினி:— அப்படி எல்லாம் நினைச்சது இல்லை.

விஜய்:— உங்கள் லட்சியம்?

நளினி:— சிறந்த நடிகைக்கான பரிசு பெற வேண்டும். அதுவும் இந்த வருடத்தில் பெற வேண்டும். வாங்குவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

விஜய்:— என்னை (விஜய்காந்த்தை) நீங்கள் காதலிப்பதாக பத்திரிகைகளில் "கிசுகிசு" வருகிறதே, உண்மையா?

நளினி:— (வெட்கத்தோடு சிரிக்கிறார். எந்தப் பதிலும் சொல்லவில்லை. கொஞ்சம் நேரம் கழித்து வாய் திறந்தார்) என்ன சார்...... நீங்களே இந்த

தினபதி சினிமா



விஜயகாந்தும், நளினியும் சந்தித்து ஒருவரையொருவர் பேட்டி கண்டார்கள். (ல—10)

# சினிமா நடிப்புக்கு சுஜாதா முழுக்கு!

சினிமா நடிகை மகாலட்சுமி என்ன சாதாரண நடிகையா! பிரபல நடிகை. கார், பங்களா, எடுபிடி ஆட்கள், ரசிகர்கள் கூட்டம் - இப்படி "ஒகோ" என வாழ்ந்து கொண்டிருந்தாள், மகா லட்சுமி.

வெளி உலகுக்கு பகட்டாக தெரிந்தாளே தவிர, அவள் உள்ளமோ அழுது கொண்டிருந்தது.

மனக் குழப்பத்தில் ஆழ்ந்து கிடந்தாள். நடிப்பு வாழ்க்கை கசந்தது. "திடீர்" என்று ஒரு நாள், பத்திரிகை நிருபர்களிடம் "சினிமா நடிப்புக்கு முழுக்கு போடப் போகிறேன்" என்றாள்.

சொன்னபடி மகாலட்சுமி (சுஜாதா) நடிப்புக்கு முழுக்கு போட்டது உண்டா? இல்லையா? என்பதற்கு கே. ஆர். ஜி. பிலிம் சர்க்யூட்டின் "ஆலய தீபம்" படத்தில் பதில் கிடைக்கும்.

சுஜாதா ஜோடி ராஜேஷ். சுரேஷ் - இளவரசி ஜோடியுடன், வனிதா, தேங்காய் சீனிவாசன், ஒய். ஜி. மகேந்திரன்



சுஜாதா

ஆகியோருடன் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார், ஜெய்சங்கர்.

ஒளிப்பதிவு: பி. பாஸ்கர்ராவ், இசை எம். எஸ். விஸ்வநாதன், ஸ்ரீதர் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்ய, கே. ஆர். கங்காதரன் தயாரிக்கிறார். "ஆலய தீபம்" ஒரு குறுகிய கால தயாரிப்பு. (ஜ—10)

# '24 மணி நேரத்தில் கொலை செய்வேன்'

## மோகன் சபதம்

"நூறுவது நாள்" படத்தை தயாரித்த எஸ். என். எஸ். திருமால் அடுத்து "24 மணி நேரம்" என்னும் படத்தை தயாரிக்கிறார் அல்லவா? இதன் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்கிறது.

இதில் மோகன் கைதியாகவும், விஜயகாந்த் ஜெயில் சூப்பிரண்டாகவும் நடிக்கிறார்.

பத்திரிகை நிருபரான மோகன், செய்யாத குற்றத்துக்காக ஜெயிலுக்கு போகிறார். "ஜெயிலில் இருந்து திரும்பிய 24 மணி நேரத்தில் உன்னை கொலை செய்வேன்" என்று சபதம் செய்கிறார்.

இந்த படத்தில் மற்றும் ஜெய்சங்கர், நளினி, சுவப்னா, சங்கிலி முருகன், செந்தில், பயில்வான் ரங்கநாதன் ஆகியோர் நடிக்கிறார்கள்.

இளையராஜா இசை அமைக்கிறார். சபாபதி ஒளிப்பதிவு செய்ய, கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார், மணிவண்ணன். (ஜ—10)

## நல்வாழ்வு நிதிச் சட்டம்

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் நலனுக்காக ஒரு சட்டம் கொண்டுவர இந்திய அரசு திட்டமிட்டது.

அதன்படி "திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு நிதிச் சட்டம்" அமுலுக்கு வந்துள்ளது. (ம—சி)

எம். சீ. ஏ. கிளை ஸ்தாபனங்களுக்கும் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

"இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இறைவழிபாடுகள், பிரார்த்தனைகள் மூலமே வென்றெடுக்க முடியும். அதனாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது"

இவ்வாறு கல்முனை வை. எம். சீ. ஏ. ஸ்தாபனத்தின் சமயப் பொதுத் தொடர்புக் குழுத் தலைவர் திரு. கே. சீ. ஜீவகடாட்சம் தெரிவித்தார். (ல–190)

அண்மையில் உயிலங்குளத்தில் திறந்து வைக்கப்பட்ட கால் நடை சந்தை திறப்பு விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.—

"மாடு ஒரு செல்வப் பொருள். அதனால்தான் மாட்டுப் பொங்கல் வைக்கிறோம். தற்போது மன்னார் மாவட்டத்தில் பசுப் பால் பாவனை அதிகரித்திருக்கிறது.

இப்பகுதியில் அதிகளவு பாலைப் பெறுவதற்கு நல்லின பசுக்கள் தேவை.

# மூதூர் வங்கியில் ஆசிரியர் சம்பளம் பெற வசதி

மூதூர், ஜூன் 18

மூதூர் கோட்டக் கல்வி அலுவலக ஆளுகைக்குட்பட்ட 55 பாடசாலைகளின் அதிபர்கள், இம் மாதம் முதல், தமது பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை, மூதூர் இலங்கை வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த மார்ச் 12 ஆம் திகதி முதல் மூதூர் மக்கள் வங்கிக் கிளை திருகோணமலையில் இயங்கத் தொடங்கியதைத் தொடர்ந்து இவ் அதிபர்கள் சம்பளப் பணம் பெறுதற்காக திருகோணமலைக்கு சென்று வந்தனர்.

திருகோணமலை சென்று வருவதில் இருந்த சிரமம் பற்றி இப் பாடசாலை அதிபர்கள் மூதூர் கோட்டக் கல்வி அதிகாரி ஜனாப் ஏ. வி. முகம்மதுவுக்குத் தெரியப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து ஜனாப் முகம்மது, திருகோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இவ்வசதியை ஏற்படுத்தினார்.

சேருவில, கிளிவெட்டி, தோப்பூர், கட்டைபறிச்சான், மூதூர் ஆகிய வலயங்களின் கீழ் உள்ள பாடசாலை அதிபர்களே, இவ்வசதியைப் பெற்றிருக்கிறார்கள். (ல–186)

# முதியோர் கல்வித் திட்டத்தின் நோக்கம்

## அங்குரார்ப்பண வைபவத்தில் விளக்கம்

வவுனதீவு, ஜூன் 18

"உணவு போஷாக்கு, சுகாதாரம், குடும்பத் திட்டம், சுற்றாடல், கல்வி, சுய தொழில் உட்பட பல்வேறு நோக்கங்களுக்காகவே முதியோர் கல்வித் திட்டம்"

இவ்வாறு கன்குடா முதியோர் கல்வித் திட்டத்தை தியாவட்டுவான் கிராமத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய, செயலக திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர் திரு. தி. சரவணபவன் குறிப்பிட்டார்.

முதியோர் கல்வி அதிகாரி திரு. எப். ஆர். ராகல் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் :—

"சகல உதவிகளையும் அரசாங்கம் செய்து தருமென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தால் சமூகத்தில் எவ்வித முன்னேற்றத்தையும் காண முடியாது.

நாட்டின் அபிவிருத்தியைப் பொறுத்தவரை ஒவ்வொரு இளைஞர், யுவதியும் எங்கள் கிராமம், எங்கள் நாடு என்ற கொள்கையில் இணைந்து செயல்பட வேண்டும்.

எல்லோருக்கும் சமமான வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இந் நிலையில் குறைந்த வருமானத்திலும் நிறைவாக வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

எவ்வித உழைப்புமின்றி பெரிதாக வாழவேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால் முன்னேற்றம் கிடைக்காது.

சுய தொழில் மூலம் வருவாய் பெறக் கூடிய வழிகளை நாட வேண்டும்"

இவ்வாறு அவர் கூறினார். (ல–313)

# ரூ. 200 கோடி தேவை

## திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

நாட்டிலுள்ள பழைய மின்சார இணைப்புக்களையும் தொலைபேசி கேபிள்களையும் திருத்தியமைக்க 200 கோடி ரூபா தேவைப்படுவதாக தொலைத் தொடர்பு திணைக்களம் அறிவிக்கின்றது.

கொழும்பிலும், அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் உள்ள தொலைபேசிக் கேபிள்கள் 40 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தவையாகும்.

இதனால் அவற்றை துரித கதியில் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

நிதிப் பிரச்சினையால் பழைய கேபிள்களையே அடிக்கடி திருத்தியமைத்து சேவைக்குப் பயன்படுத்துவதாக தொலைத் தொடர்பு திணைக்களம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

இதேவேளை, கொழும்பு, கொள்ளுப்பிட்டிப் பகுதியில் பழைய கேபிள்கள் அகற்றப்பட்டு புதிய கேபிள்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் செப்டம்பரில் இந்த வேலைகள் முடிவடையும் என்று தொலைத் தொடர்பு திணைக்களம் அறிவிக்கின்றது. (ல–11)

கிளிநொச்சி:

# உ. அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜூன் 18

"பொது மக்களின் தேவைகளை மனங்கோணாமல் நிறைவேற்றுவதே ஒவ்வொரு அரச ஊழியர்களினதும் கடமையாகும். அதே சமயம் அவர்களுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பும், ஒற்றுமையும் அவசியம் தேவை. எனது பகுதி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். மக்கள் தங்களின் தேவைகள் எதுவானாலும் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்"

கடந்த் மாதம் புதிதாக இடமாற்றம் பெற்று வந்த கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் சு. மகாதேவா இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இவர் கடந்த ஏழு வருடங்களாக தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ல–244)

## உயர் கல்வி பெறும் வாய்ப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் மாணவ மாணவியர் உயர் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம். எல். எம். அபுசாலியின் அயராத முயற்சியால், பலாங்கொடை ஜெய்லானி மகா வித்தியாலயத்துக்கு விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பூரணத்துவம் பெற்ற விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றும் இவ்வித்தியாலயத்தில் இருக்கின்றது.

தற்போதைக்கு இங்கு தூயகணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் போதிக்கப்படவிருக்கின்றன. (ஏ—க)

தினபதி

தொலைபேசி: 23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12.

— 1984 ஜூன் 19 —
சுடர் 17 கதிர் 2705

# எம். ஜி. ஆர். அரசே ராஜினாமா செய்!

## துரைமுருகன் முழக்கம்

சென்னை, ஜூன் 18

தமிழ் நாட்டில் பந்தயக் குதிரையாக இருந்த தொழில் துறை அ.தி.மு.க. ஆட்சியில் நொண்டிக் குதிரையாகி விட்டது. தனிப்பட்ட முதலாளி பொள்ளாச்சி மகாலிங்கம் பண்ணாரி மாரியம்மன் சர்க்கரை ஆலைக்கு மத்திய அரசிடம் அனுமதி பெற்று விட்டார். மாயவரம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அந்த அனுமதியைப் பெற முடியாத கையாலாகாத அரசே ராஜினாமாச் செய் என்று சட்டப் பேரவையில் துரை முருகன் கூறினார்.

துரை முருகன் பேசியது வருமாறு:—

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற குறளுக்கு ஏற்பவோ என்னவோ நமது பொன்னையனிடம் இப்போது தொழில்துறை தரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பந்தயக் குதிரை போல் இருந்த தொழில் துறை இன்றைய தினம் நொண்டிக் குதிரையாகி விட்டது. அதற்குப் புத்தூர் கட்டுப் போட பொன்னையன் வந்திருக்கின்றார்.

தொழில் துவங்க வேண்டும் என்றால் மூலதனம் வேண்டும். பணம் வேண்டும். அது தமிழ் நாட்டில் இல்லை. சரி. பணம் போட்டுத் தொழில் ஆரம்பித்தால் தொழில் நடக்க மின்சாரம் வேண்டும். அதுவும் இல்லை. பணமும் இல்லாமல், மின்சாரமும் இல்லாமல் எப்படித் தொழில் துவங்க முடியும்?

நமது மின்துறை அமைச்சர் மிகக் கெட்டிக்காரர். அவர் சட்ட சபையில் வந்து விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லை. தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு இல்லையென்று சொல்லி விட்டுப் போய் விடுவார். சட்ட சபை முடிந்ததும் வந்துவிடும் பவர் கட்.

நாம் மின்சாரத் துறைக்குத் [illegible] இங்கே படிக்கப்படுகின்றது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முயற்சிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க புதுத் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டும். அதற்கு இங்கே வழியில்லை. சரி இருக்கிற தொழிற்சாலைகள் எப்படி இருக்கிறது? ஸ்டிரைக், லாக் அவுட். இவைகளைத் தீர்க்க அரசு முயற்சியெடுக்க 9 மாதமாகிவிடுகிறது. அது என்னவோ இந்த அரசுக்கு 9 இல் ஒரு கவர்ச்சி. டெண்டரா? பேச்சுவார்த்தையா? எல்லாவற்றிற்கும் 9 மாதமாகி விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் இங்கே எப்படித் தொழில் வளரும்?

தடையில்லா வணிக மண்டலம் அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு நிதி ஒதுக்கவில்லை. நீங்கள் சொல்லலாம். ஒரு ரூபாய் நிதி ஒதுக்கிய சத்துணவிற்கு நாங்கள் 300 கோடி ரூபாய் செலவிடவில்லையா? அந்த டிப்பார்ட்மெண்டிலிருந்து இந்த டிப்பார்ட்மெண்டிற்கு. இதிலிருந்து அதற்கு என்று பணத்தை மாற்ற வேண்டியதுதானே என்பீர்கள். எல்லாம் தலைப்பாகை மாற்றுகிற வேலை.

மத்திய அரசு தொழிற்சாலை இல்லாத மாவட்டங்கள் என்று இந்தியா முழுவதும் 83 மாவட்டங்களைச் சலுகை தருகிறது. இதில் தமிழ்நாட்டிற்கு ஒன்று கூட இல்லை.

மத்திய அரசிடம் போராடி வாங்க உங்களால் முடியவில்லை. முதலமைச்சர் பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்கிறார்.

மத்திய அரசு பாடிக் கறக்கிற மாடுமல்ல, ஆடிக் கறக்கிற மாடுமல்ல. அது அடித்துக் கறக்கிற மாடு. அதை அடித்துத்தான் கறக்க வேண்டும்.

திருத்தணி சர்க்கரை ஆலை அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்குள் வேலை துவங்கா விடில் மத்திய அரசு தரும் மானியம் 75 லட்சம் இழப்பு ஏற்படும். நான் கட்சி எல்லைகளை எல்லாம் கடந்து சொல்கிறேன். அமைச்சரும், துணைச் சபாநாயகரும் என்னுடன் வந்தால் எனது காரிலேயே அழைத்துச் சென்று காட்டுகிறேன். அங்கே எந்த வேலையும் இன்னும் நடக்கவில்லை. இதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

மாயவரம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான அனுமதி மத்திய அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள்.

பொள்ளாச்சி மகாலிங்கம் பண்ணாரி மாரியம்மன் சர்க்கரை ஆலைக்கான அனுமதியை மத்திய அரசிடம் பெற்று வந்து விட்டார். மாயவரம் கூட்டுறவு ஆலைக்கான அனுமதி பரிசிலனையில் இருக்கிறது.

பொள்ளாச்சி மகாலிங்கத்தால் முடிகிற காரியம் இந்த சர்க்காரால் முடியவில்லை.

டில்லியில் உங்களுக்கு ஒரு சிறப்புப் பிரதிநிதி. இங்கே ஒரு அமைச்சர் சபை. முதலமைச்சர் பின்பலம் இதற்குப் பெயர் ஒரு சர்க்கார்!

பொள்ளாச்சி மகாலிங்கத்தால் ஆகிற காரியம் உங்களால் முடியவில்லை என்றால், மத்திய அரசிடம் அனுமதி பெற கையாலாகவில்லை என்றால் ராஜினாமா செய்யுங்கள்.

இவ்வாறு துரை முருகன் பேசினார். (ல—சி)

## வேம்பு வளர்ப்பு

வேப்ப மரங்களை வளர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளார் சுதேச வைத்தியத் துறை அமைச்சர் வி. ஜே. எம். லொக்கு பண்டார.

நாடு முழுவதிலும் நடுவதற்கு இருபத்தையாயிரம் வேப்பங் கன்றுகளை இலவசமாக விநியோகிப்பதற்கு அமைச்சர் தீர்மானித்திருக்கிறார்.

வேப்பங் கன்றுகளை இலவசமாகப் பெறுபவர்கள் அவற்றை நட்டுப் பேணி வளர்க்கிறார்களா என்பதைக் கண்காணிக்கவும் அமைச்சர் ஏற்பாடு செய்ய இருக்கிறார்.

நாட்டில் வேப்ப மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு என்ன என்ன எல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்யத் தயாராக இருக்கிறார் அமைச்சர்.

வேப்ப மரத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தவர் என்ற காரணத்தால் தான் அமைச்சர் லொக்கு பண்டார வேப்ப மரங்களை வளர்த்து எடுப்பதில் இவ்வளவு கரிசனை கொண்டுள்ளார்.

மருத்துவத் துறையிலும் வழிபாட்டுத் துறையிலும் முக்கியத்துவம் பெற்ற மரம் வேப்ப மரம்.

இந்தக் காரணத்தினால் தான் பழங் காலத்திலிருந்தே மக்கள் வேப்ப மரத்தை வீடுகளில் வளர்த்து வருகிறார்கள்.

முத்து மாரியம்மன் கோயில்களில் நடைபெறும் பல கிரியைகளில் வேப்பிலைதான் பிரதான இடத்தைப் பெறுகிறது.

அம்மன் நேர்த்திக்காக [illegible]

## கொள்ளை லாபம்

மூதூர், ஜூன் 18

மூதூர் பகுதியில் வர்த்தகர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் அடிக்கின்றனர்.

இவ்வாறு பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கட்டுப் பாட்டு விலைப் பொருட்கள் கூட இங்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இப் பகுதிக்கு அடிக்கடி வராமையினாலேயே இப்படி நடப்பதாகக் கூறப்படுகின்றது. (ல— 186)




ஸ்ரீலங்கா — ஜப்பான் நட்புறவுச் சங்கத்தின் 8 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் [illegible]

## பணியில் லாபம் பெறுவது

## மீண்டும் இயங்கும்

தலைமன்னார், ஜூன் 18

தலைமன்னார் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கும்.

இத் தகவலை பிரதேச அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.

இயந்திரங்கள் பழுதடைந்ததால் வேலைகள் ஸ்தம்பித்ததாகவும், தற்போது சிங்கப்பூரிலிருந்து உதிரிப் பாகங்கள் வந்துள்ளதால் விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ல— 286)

## காணிகள் வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சி லக்ஸபான மின்சார நிலையத்துக்குப் பின்பக்கத்தில் அத்துமீறிக் குடியிருந்து வருவோருக்கு ¼ ஏக்கர் வீதம் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இக் காணிகளில் இருப்போருக்கு மாவட்டக் காணி அதிகாரி அனுமதிக் கடிதங்களை அனுப்பி வருகிறார்.

இக் கடிதத்தில், காணிகளில் இருப்பவர்கள், தங்களுக்குரிய ¼ ஏக்கரை வைத்துக் கொண்டு மேலதிகமானதை அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

மேலதிக காணிகள் இங்குள்ள காணியற்றோருக்கு ¼ ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது. (ல— 244)

## செய்தித் திரட்டு

### கலையரங்கு

பேசாலை, ஜூன் 18

மன்னார் பழைய மின்சார நிலையக் கட்டடம் கலையரங்காக மாற்றம் செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் ஜனாப் எச். எம். நிசாம் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது. (ல— 251)

### நிதி ஒதுக்கீடு

பளை, ஜூன் 18

பருத்தித்துறைத் தொகுதி கிழக்குப் பிரதேசத்தில் இருக்கும் பாடசாலைகளுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு 85 ஆயிரம் ரூபா செலவிலும், ஆழியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகாவித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 60 ஆயிரம் செலவிலும் கட்டடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. (ல— 239)

### திருவிழா

ஒட்டுசுட்டான், ஜூன் 18

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இவ் வருடம் எளிமையான முறையில் கொண்டாடப்படும்.

அண்மையில் நடைபெற்ற ஆலய நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

ஆலயத்தின் கொடியேற்ற வைபவம் எதிர்வரும் 27 ஆம் திகதியும், தேர், தீர்த்தோற்சவங்கள் ஜூலை 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும் நடைபெற உள்ளன. பி. ப. 6.00 மணியுடன் திருவிழா நிகழ்ச்சிகள் முடிவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ல— 235)

### கருத்தரங்கு

பேசாலை, ஜூன் 18

தலைமன்னாரில் வீதி ஒழுங்கு, குற்றத் தடுப்பு, சூழல் சுகாதாரம் இன ஒற் [illegible]

...தான இடத்தைப் பெறு கிறது.

அம்மன் நேர்த்திக்காக எடுக்கும் கும்பத்தில் வேப் பிலை, அம்மன் ஆலயத்தில் உருக்கொண்டு ஆடும் பக்தர் கள் கையில் வேப்பிலை. இப் படி அம்மன் கோயிலோடு அதிகம் தொடர்புபட்டிருக் கும் வேம்பை வீட்டில் வளர்த் தால் அம்மன் கடாட்சம் கிட் டும் என்ற நம்பிக்கை சக்தி வழிபாட்டுக்காரர்களுக்கு உண்டு.

நிழல்களில் எல்லாம் வேப்ப மர நிழல் மிகச் சிறந்தது. சுகானுபவம் தருவது.

வேம்பு நிற்கும் சூழலில் உள்ள காற்று சுவாசிக்கச் சிறந்தது.

சில நோய்களைத் துரித மாகக் குணமாக்கும் தன்மை அந்தக் காற்றில் உண்டு என்று கண்டுபிடிக்கப்பட்டு இருக் கிறது.

இவை தவிர வேம்பில் பயன்களும் அதிகம்.

வேப்பெண்ணெய்யும் வேப் பம் பட்டையும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வேப்பம் விதையைப் புகைப் போட்டால் நுளம்புகள் கிட்ட வரமாட்டா.

மா, பலா போன்ற மரங் கள் காய்த்தால் தான் பயன் கிடைக்கும். வேம்பு பூத்தாலே பயன்.

வேப்பம் பூ, வடகத்துக்கு அருமையான ஒரு பொருள். வேப்பம் பூ கொண்டு வடகம் செய்வது பலருடைய சிறு கைத்தொழில்.

எத்தனை விதமான வடகம் இருந்தாலும் சத்து, சுவை — இரண்டிலும் வேப்பம் பூ வடகத்துக்கு நிகருண்டா?

வேம்பு வளர்ந்து வருடங் கள் பல சென்று விட்டால் அதை வெட்ட வேண்டி வரும்.

வெட்டிய மரமும் வீணாவ தில்லை. அடி மரமும் அகன்ற கொப்புகளும் பலகை அறுக்க வும் மிகுதிப் பகுதிகள் விற காக எரிக்கவும் பயன்படுகின் றன.

வேம்பு என்று வெறுமனே சொன்னால் அதன் பெறுமதி பலருக்குப் புலனாவதில்லை. அலசிப் பார்க்கும் போது தான் அது ஒவ்வொரு கட் டத்திலும் எவ்வளவு பயன் தருகிறது என்பது தெரிய வரும்.

நாடு முழுவதிலும் வீடு தோறும் வேம்புகள் இருப் பது மிகவும் நல்லது. சுதேச வைத்தியத் துறை அமைச்ச ரின் வேம்பு வளர்ப்புத் திட் டம் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு இல்லையென்று சொல்லி விட்டுப் போய் விடுவார். சட்ட சபை முடிந்ததும் வந்துவிடும் பவர் கட்.

நாம் மின்சாரத் துறைக்குத் தான் அதிகம் செலவு செய் கிறோம். 500 கோடி ரூபா கொடுத்திருக்கிறோம். மின்சார இலாகா ஒரு வெள்ளை யானையா கவே இருக்கிறது.

மேட்டூர் அனல் மின் நிலை யம் அமைக்க அனுமதி கிடைத்து விட்டது. அதற்கு சிவில் வேலை களுக்கு ஒப்பந்தம் கோரினார் கள். ஒப்பந்தக்காரர்கள் டென் டர் போட்டார்கள். அது நாலு மாதம், நாலு மாதம் என்று தள்ளி இன்னும் டென் டர் பிரிக்கப்படவில்லை. ஒரு வருடமாகி விட்டது.

### இராமாயணம்

அது போலவே லோயர் மேட்டூர் திட்டம் காண்டிராக்ட் விட்டார்கள். அதில் சிலபேர் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டில் அவர்களுக்குத் தீர்ப்பானலும் சாதகமாக வில்லை. சுப்ரீம் கோர்ட் போய் இருக்கிறது. வேலை துவங்க வில்லை.

இங்கே தொழில் துறைக் கொள்கைக் குறிப்பு வைத்திருக் கிறீர்கள். அதிகாரிகள் எழுதிக் கொடுத்த அதே பழைய இரா. மாயணம் வருடா வருடம்

றது. (ல- 186)

# பனையில் லாபம் பெறுவது இந்தியாவும், இலங்கையுமே

## பனம் பொருள் கருத்தரங்கில் உரை

பேசாலை, ஜூன் 18

உலகில் எட்டு நாடுகளில் பனைவளம் இருக்கிறது. இவற்றில் இந்தியாவும், இலங்கையுமே பனை வளத் தின் மூலம் அதிக லாபத் தைப் பெற்று வருகின்றன.

தலைமன்னாரில் அண்மை யில் பனம் பொருள் அபிவிருத்தி விழாவொன்று நடந்தது. இவ் விழாவில் இடம்பெற்ற கருத் தரங்கில் உரையாற்றிய பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராஜா மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இக் கருத்தரங்கு தலைமன்னார் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்; தலைமன்னார் பகுதி மக்களுக்கு பனையின் பயன்பற்றி நன்கு தெரியும்.

இவர்கள் பனையின் பயன் பற்றி ஏனைய பகுதி மக்களுக்கு எடுத்துக் கூறும் தகுதி பெற்றி ருக்கின்றனர்.

பனைகள் அதிகமாகவுள்ள இடங்களிலேயே பனம் பொருள் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்.

பனம் பொருள் அபிவிருத்தி சபை எதிர்நீச்சல் போட்டு பனம் பொருள் அபிவிருத்தியை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை 2,500 யுவதிகளுக்கு பனம் பொருள் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்பட்டிருக் கிறது.

பனை ஓலை மிகவும் பயனுள்ள ஒரு மூலப் பொருள். அதனைப் பயனுள்ள வழிகளில் பயன் படுத்த மக்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலும் பதநீர் மூலம் விசேடமான பானம் தயாரிக் கப்பட்டு விற்பனை செய்யப்படு கின்றது.

இதே போன்ற திட்டம் ஒன்றை நாமும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங் களில் ஆரம்பித்திருக்கிறோம்.

இந்தியா, பனம் தும்பு ஏற்று மதி மூலம் வருடம் 250 கோடி ரூபாவைப் பெற்று வருகிறது.

நாமும் இவ்வருடம் பனம் தும்பை ஜப்பானுக்கு ஏற்று மதி செய்யவிருக்கிறோம். தலை மன்னார், பேசாலை ஆகிய பகுதி களில் வருடம் ஒன்றிற்கு 200 தொ[illegible] பனம் தும்பைப் பெற முடியும்.

எதிர்வரும் ஜூலை முதல் மன் னாரில் இயங்கி வரும் பனம் பொருள் அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயம் தலை மன்னாருக்கு இடமாற்றம் செய் யப்படும். இதன் மூலம் இப் பகு தியின் செயற்பாடுகள் தீவிரம் அடையும்.

பனம் பொருள் உற்பத்தி பற்றி மேலும் பயிற்சி பெறுவ தற்காக நாடு முழுவதிலும் இருந்து 5 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்

இவ்வாறு அவர் கூறினார்.

(ல- 251)

ஸ்ரீலங்கா — ஜப்பான் நட் புறவுச் சங்கத்தின் 8 ஆவது வரு டாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் [illegible] கமத்தொழில் ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் ஹிரோசி ஓட்டாகா கூட்டத் தில் உரையாற்றுவதையும், கலந்து கொண்ட பிரமுகர்களை யும் படத்தில் காண்க.

(ல- *ச)

## கருத்தரங்கு

பேசாலை, ஜூன் 18

தலைமன்னாரில் வீதி ஒழுங்கு, குற்றத் தடுப்பு, சூழல் சுகாதாரம், இன ஒற் றுமை தொடர்பான கருத் தரங்குகள் விரைவில் நடை பெறும்.

இக் கருத்தரங்குகள் யாவும் தலைமன்னார் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரச ரத்தினம் தலைமையில் நடை பெறுமென தலைமன்னார் பாவ னையாளர் சங்கத் தலைவர் திரு. எல். ஏ. லேனட் தெரிவித்தார்.

(ல- 251)

## உபகார நிதி

பலாங்கொடை, ஜூன் 18

இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் உயர் கல்வி பெற வசதியில்லாத மாணவர்க ளுக்காக உபகார நிதியொன் றைத் திரட்டி வருகிறது.

இந் நிதிக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப ஒன்றியத் தின் இரத்தினபுரி மாவட்டப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ. எம். பளீல் தாராள மனதுடன் உதவியிருக்கிறார்.

இவர் 25 மாணவர்களுக்கு 4 வருட காலத்துக்குத் தொடர்ந்து உபகார நிதியினை வழங்க முன்வந்திருக்கிறார்.

(ல- 38)

## மருந்துகள்

கிளிநொச்சி, ஜூன் 18

கடந்த ஜூலை கலவரத் தின் பின்பு, முதற் தடவை யாக கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மருந்து களை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் அனுப்பி வைத்திருக்கிறது.

இவற்றின் பெறுமதி ரூபா 1 லட்சமாகும்.

(ல- 244)

## கொள்ளை

புங்குடுதீவு, ஜூன் 18

நள்ளிரவில் வீடுபுகுந்த திருடர்கள் அவ் வீட்டுப் பெண்மணியை மயக்கமுறச் செய்து விட்டு அங்கிருந்த சுமார் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை எடுத்துச் சென்றனர்.

இரசாயன மருந்தொன் றைப் பாவித்து, அப் பெண்ணை மூர்ச்சையாக்கியதாகக் கருதப் படுகிறது.

புங்குடுதீவு 10 ஆம் வட்டா ரத்தில் உள்ள வீடு ஒன்றில் இச் சம்பவம் நடைபெற்றது. அப் பெண்மணி மறுநாட் காலை வரை மயக்கம் தெளியாத நிலை யிலேயே இருந்தாராம்.

இக் கொள்ளை தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலீ ஸார் புலன் விசாரணைகளில் ஈடு பட்டுள்ளனர்.

(ல- 240)

# புனித ரமழான் சிந்தனைகள்

மாதங்களில் நாயகனாய் மலர்ந்த, மாண்புறு மாதமாம் ரமழானின் கடைசிப் பத்தில் காலடி வைக்கிறோம். எமது பிரார்த்தனைகளுக்கு அல்லாஹ் வின் அங்கீகாரத்தைப் பெற் றுக் கொள்வதற்கு மிக உகந்த மாதமாக இருப்பது இப் புனித மாதம்தான்.

"துஆ" (பிரார்த்தனை) என் பது முஃமினின் ஆயுதம், தீனின் தூண்; விண்ணுக்கும் மண்ணுக் கும் ஒளி" என்று இறை தூதர் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

எனவே, எமக்குத் தேவை யான இம்மை, மறுமை தேவை களைப் பெற்றுக் கொள்வதற் காக இந்த அருள் நிறைந்த மாதத்தை நாம் நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக நோன்பு திறக்கப் படும் நேரங்களில் கேட்கப் படும் துஆக்கள் அல்லாஹ்வி னால் அதிகமாக அங்கீகரிக் கப்படுவதாக ஹதீஸ் ஷரீபில் காண முடிகின்றது.

ஒருமுறை இறை தூதர் (ஸல்) அவர்கள், மூன்று பேர் களின் துஆக்கள் அல்லாஹ் வால் [illegible]

என்று கூறினார்கள். அதில் 1. நோன்பாளி நோன்பு திறக்கும் போது கேட்கும் துஆ, 2. நீதி யுள்ள அரசனின் துஆ, 3. அநீதி இழைக்கப்பட்டவனின் துஆ என்பதாகும்.

எனவே, நோன்பாளிகளாக இருக்கும் போதே நாம் எமது தேவைகளை அல்லாஹ்விடம் கேட்க மறந்து விடக் கூடாது.

"அல்லாஹ் நிச்சயமாக கரு ணையும், கிருபையும் உடையவன். எனவே, தன் அடியான் தன்பால் கை உயர்த்திக் கேட்ட பின்னர் அதிலே, எதையும் அளிக்காமல், வெறும் கையால் அனுப்ப வெட்கப்படுகிறான்" என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

எமது பிரார்த்தனைகள் அங்கீ கரிக்கப்படுவதில்லை என்று நாம் வீணே அலட்டிக் கொள் கிறோம். ஆனால் எமது உண்மை யான பிரார்த்தனைகள் ஏதோ ஒரு வகையில் அல்லாஹ்வின் அங்கீகாரத்தைப் பெற்று விடு கின்றன. இதனை நாம் தான் உணர மறுக்கிறோம்.

இது பற்றி ரஸூல் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறு கிறார்கள்: "ஒரு முஸ்லிம் துஆ செய்கிறார். அவர் எதை நினைத் துத் துஆச் செய்தாரோ, அது அவருக்குக் கிடைத்தே விடுகின் றது. அல்லது அதற்குப் பதி லாக அவருக்கு ஏற்படவிருந்த துன்பம் அகற்றப்படுகின்றது. அல்லது அந்த அளவில் அவர் பங்கில் நன்மை அளிக்கப்படு கின்றது."

இந்த நபி மொழியின் மூலம் எமது துஆக்கள் "கபூல்" செய் யப்படுவதை நாம் நன்கு உணர் கிறோம் அல்லவா?

துஆக்கள் அல்லாஹ்வால் ஒப்புக் கொள்ளப்படும் நேரங் களில் ரமழான் மாதம் இரவு — பகல் எல்லாக் காலமும் நோன்பு திறக்கும் நேரம், ஸஹர் சாப்பிடும் நேரம் புனித ரமழானின் கடைசி ஒற்றை இர வுகள் முக்கிய இடத்தை வகிக் கின்றன.

ரமழான் மாதத்தில் எமது துஆக்களை அதிகரித்து, அதன் மூலம் எமது இம்மை, மறுமை தேவைகளைப் பெற்றுக் கொள்ள முனைவோமாக!! ஆமீன்!!

(11)

நஸீர் நூருல் அமீன்

# இளம் கலைஞரை கௌரவிப்பதில் பெருமையடைகிறேன்

## வெள்ளோட்ட வழாவில் உரை

சாவகச்சேரி, ஜூன் 18

இறை பக்தி, குருபக்தி, கலை உணர்வுதான் இந்த இளைஞரை சிறந்த ஒரு சிற் பக் கலைஞராக்கியது என லாம். இளைஞர் சமுதாயத் தின் முன்னோடியாகத் திக ழும் இந்தக் கலைஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் பெருமை அடைகிறேன்.

இப்படிக் கூறினார் ஆத்ம ஜோதி ஆசிரியர் சிவஞான வாரிதி நா. முத்தையா.

சரசாலை நுணுவில் ஸ்ரீசிதம் பர விநாயகர் ஆலயத்திற்கு சுமார் 2½ லட்சம் ரூபா செல வில் புதிய சித்திரத் தேர் ஒன்று உருவாக்கப்பட்டது.

அதன் வெள்ளோட்ட விழா அண்மையில் நடைபெற்றது. இவ் விழாவில் அதனை உருவாக் கிய இளம் சிற்பக் கலைஞர் மட் டுவிலூர் சி. கலாமோகன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, பொன்னாடை போர்த்தும் பொழுதே திரு. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து கூறியதாவது:—

இந்தத் தேர் ஆகம ரீதியாகப் பல பாரிய தத்துவங்களை உள்ள டக்கியிருக்கிறது. அவ்வாறு இதனை அமைப்பதற்கு நீண்ட அனுபவமும், ஞான அறிவும், கலையுணர்வும், பக்தியும் வேண் டும்.

இந்த இளம் வயதிலேயே இந்த சிற்பி இந்த கலையில் முதிர்ச்சி அடைந்திருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் இவரின் இறை பக்தி, குரு பக்தி, கலை உணர்வுதான்.

இளம் சமுதாயம் இவரைப் பின்பற்றி கலைஞானத்தில் முன் னணிக்கு வரவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சிற்பக் கலைஞர் மட்டுவிலூர் கி. கலாமோகனின் குருவான கலைஞர் தம்பித்துரை சீடனை வாழ்த்தி மலர் மாலை அணிவித் தார்.

சைவப் புலவர் ச. கைலாச பிள்ளை, சைவப் புலவர் கு. வி. மகாலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராஜா ஆகி யோரும் வாழ்த்துரை வழங் கினார்கள்.

தென்மராட்சி நிருபர் உதவி

(ல- 51)

# இந்திரா காந்திக்கு பலத்த பாதுகாப்பு

## இராணுவத்திலிருந்து வெளியேறிய சீக்கிய வீரர்களால் ஆபத்து வரலாம் என அச்சம்



இந்திரா

புதுடில்லி, ஜூன் 18

இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் உயிருக்கு ஆபத்து வரலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திரா காந்தியின் வாசஸ்தலத்துக்கு ஆயுதந் தாங்கிய துருப்புகள் காவல் நிற்கின்றன. தடுப்புக் காவல் போடப்பட்டு பல வீதிகள் மூடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இந்திய இராணுவத்திலிருந்து வெளியேறிய சீக்கிய அதிருப்தியாளர்கள் இந்திரா காந்தியின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடுமென பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்.

2 தினங்களுக்கு முன்பு எதிர்க் கட்சி இணை ஒன்றின் தலைவர்களான முன்னாள் பிரதமர் சரண் சிங், வாஜ்பாயி ஆகியோரைக் கொலை செய்யப் போவதாக சீக்கிய தீவிரவாதிகள் எச்சரிக்கை கடிதமொன்றை அனுப்பியிருந்தனர்.

பஞ்சாப் நிலைமை பற்றி அவர்கள் வெளியிட்ட கருத்துகளுக்காகவே இந்த எச்சரிக்கை செய்யப்படுவதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

லண்டனில் சீக்கிய தனி நாடு ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ள சீக்கிய பிரிவினை வாதத் தலைவர் ஜகத் சிங் சவ்வானின் ஆதரவாளர்களின் எதிர்ப்பையும் இந்திரா காந்தி எதிர் நோக்க வேண்டியுள்ளது.

பஞ்சாப்பில் காலிஸ்தான் பெயரில் தனிநாடு ஒன்றை நிறுவுவதே தமது நோக்கமென ஜகத் சிங் சவ்வான் கூறியுள்ளார். (ந)

### பிரெஞ்சு ஜனாதிபதி நாளை ரஷ்யா விஜயம்

மாஸ்கோ, ஜூன் 18

பிரெஞ்சு ஜனாதிபதி ரஷ்யாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். இவ்வேளை பிரான்ஸ் கிழக்கு மேற்கு நாடுகளின் நட்புறவைப் பேண உதவ வேண்டுமென ரஷ்ய கருத்துரையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரெஞ்சு ஜனாதிபதி நாளை ரஷ்யாவுக்கு மேற்கொள்ளும் விஜயம் நான்கு வருடங்களாக தடைப்பட்டிருந்த ரஷ்ய — பிரெஞ்சு மாநாட்டினை மீண்டும் தொடர வழி வகுக்கிறது. (ந)

## ரஷ்ய வீரர்களுக்கு பிரிட்டன் புகலிடம்

லண்டன், ஜூன் 18

ஆப்கானிஸ்தானிலுள்ள இரு ரஷ்ய போர் வீரர்களுக்கு பிரிட்டனில் தற்காலிக புகலிடம் கொடுக்கப் பட்டுள்ளது.

பிரதம மந்திரி மார்க்கரட் தாட்சரிடம் போர் வீரர்கள் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே புகலிடம் கொடுக்கப்பட்டதாக உள்ளக அமைச்சு நேற்று அறிவித்தது.

12 மாதங்களுக்கு பிரிட்டனில் தங்கியிருக்க அனுமதி கிடைத்ததன் பின்னர் 3 நாட்களுக்கு முன் இரு வீரர்களும் பிரிட்டன் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அரசியல் புகலிடம் பெறுவதற்கு முழுத் தகுதியையும் பெறாதவர்கள், அகதிகள் என்ற ரீதியிலும் இவர்களைச் சேர்க்க முடியாது. ஆனால் தங்கும் காலத்தை அவர்கள் மேலும் நீடிக்க விரும்பினால் அந்த விண்ணப்பங்கள் இரக்கமான முறையிலேயே பரிசீலிக்கப்படும் என உள்ளக அமைச்சு அதிகாரி கூறினார்.

இந்த வருட முற்பகுதியில் ஆப்கன் கிளர்ச்சியாளர்களால் இந்த வீரர்கள் சிறைப் பிடிக்கப் பட்டிருந்தனர்.



அண்மையில் பிரிட்டனுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் றேகன் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சருடன் காணப்படுகிறார்.

லண்டனில் நடைபெற்ற 7 நாடுகளின் பொருளாதார உச்சி மாநாட்டில் இவர்கள் கலந்து கொண்டார்கள். (ந)

### இருவர் மரணம்

டாக்கா, ஜூன் 18

வங்காள தேசத்தில் நடந்த ரயில் விபத்து ஒன்றில் இருவர் கொல்லப்பட்டனர். 150 பேருக்கு மேல் காயமுற்றனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாமான் வண்டியொன்றுடன் பிரயாணிகள் வண்டியொன்று மோதியது.

இந்த விபத்தில் மோசடிகள் இடம் பெற்றிருக்கலாமென ரயில்வே அதிகாரிகள் கூறினர்.

இம்மாதம் 12ஆம் திகதி வங்காள தேசத்தின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் 5 பேர் கொல்லப்பட்டனர். 200 பேருக்கு மேல் காயமுற்றனர்.

இந்த இரு விபத்துகளும் நடைபெற்ற பகுதிகளில் ரகசியமாகச் செயல்படும் மார்க்ஸீய பிரிவினரின் நடமாட்டம் இருந்து வருவதாக கூறப்படுகிறது. (ந)

### புதிய பிரதமராக ஜோன் டேர்னர்

ஒட்டாவா, ஜூன் 18

கனடாவின் புதிய பிரதமராக 55 வயதான முன்னாள் நிதியமைச்சர் ஜோன் டேர்னர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

அடுத்த இரு வாரங்களுக்குள் இவர் பதவியேற்பார் எனத் தெரிகிறது.

இதுவரை பிரதம மந்திரியாகவிருந்த 64 வயதான பியர் ட்ரூடோ ஓய்வு பெறப் போவதாக கடந்த பெப்ரவரியில் அறிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து லிபரல் கட்சியின் புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் ஜோன் டேர்னர் வெற்றி பெற்றார். (ந)

## அசாமில் வங்காளி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### இருவர் உயிரிழந்தனர்

புதுடில்லி, ஜூன் 18

வங்காளிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது, இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இருவர் உயிரிழந்தனர். 21 பேர் காயம் அடைந்தனர்.

அசாம் மாநிலத்தின் எல்லையில் உள்ள வங்காளதேசத்தில் இருந்து அசாமுக்குள் வங்காளிகள் சட்ட விரோதமாக வந்து குடியேறுவதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அசாமில் 35 லட்சம் வங்காளிகள் சட்ட விரோதமாகக் குடியேறி உள்ளனர் என அசாம் மாநிலத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அரசாங்கம் 10 லட்சம் பேரே குடியேறி உள்ளனர் என்று தெரிவிக்கிறது.

வங்காளிகள் சட்ட விரோதமாக தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டு, அசாம் சட்டசபைத் தேர்தலில் வாக்களித்துள்ளனர் என தீவிரவாத அசாமியர்கள் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

இவ்வாறு குடியேறிய வங்காளிகளுக்கும் அசாமியர்களுக்கும் இடையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட இனக் கலவரத்தில் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. அப்பொழுது சுமார் 3 லட்சம் பேர் வீடு வாசல்களை இழந்தனர். (ந)

## இந்திய வர்த்தக குழு பீகிங் விஜயம்

### தேயிலை வர்த்தகத்தில் கூட்டுறவு முயற்சி பற்றி பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவின் அதிகார பூர்வ வர்த்தக தூதுக் குழு வொன்று இன்று பீகிங்குக்கு

அத்துடன் சந்தைப்படுத்தும் முறைகளை இணைந்து மேற் கொள்வதற்கான பேச்சுவார்த்

## பாக்தாத்தில் ஆயுதபடை தீவிர தேடுதல்

இந்த வாரம் பாக்தாத்தில் பாதுகாப்புப் பொலீஸாரின் தலைமையகம் மீது குண்டுத்தாக்குதல் முயற்சி இடம் பெற்றதாக

## தேயிலை வர்த்தகத்தில் கூட்டுறவு முயற்சி பற்றி பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவின் அதிகார பூர்வ வர்த்தக தூதுக் குழு வொன்று இன்று பீகிங்குக்கு விஜயம் செய்கிறது.

சர்வதேச தேயிலை வர்த்தகத்தில் கூட்டுறவு முயற்சிகளை மேற்கொள்ள பேச்சு வார்த்தைகள் நடத்தவே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்திய தூதுக்குழு 10 நாட்கள் தங்கியிருந்து அங்குள்ள தேயிலைத் தோட்டங்களைப் பார்வையிடும்.

அத்துடன் சந்தைப்படுத்தும் முறைகளை இணைந்து மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவுள்ளன.

இரு நாடுகளுக்கிடையிலும் இவ்வித பேச்சுவார்த்தைகள் 20 வருடங்களுக்குப் பிறகு நடப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா, சீனு ஆகிய நாடுகளுடனும் இலங்கையும் சேர்ந்து உலகச் சந்தையிலுள்ள தேயிலையில் 60 வீதத்தை உற்பத்தி செய்கின்றன. (ந)

---

யிலேயே பரிசீலிக்கப்படும் என உள்ளக அமைச்சு அதிகாரி கூறினர்.

இந்த வருட முற்பகுதியில் ஆப்கன் கிளர்ச்சியாளர்களால் இந்த வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் பிரிட்டனில் தங்குவதற்கான தீர்மானம் பிரதம மந்திரியின் அங்கீகாரத்துடனேயே எடுக்கப்பட்டது என உள்ளக அமைச்சின் பேச்சாளர் மேலும் கூறினர்.

இவர்கள் பிரிட்டனில் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பலர் புகலிடம் கேட்கக் கூடுமென கேள்வி எழுப்பப்பட்டபோது, மேலதிக விண்ணப்பங்களைப் பற்றி ஒரு திட்டமும் எடுக்கப்படவில்லை. ஆனல் ஒவ்வொரு விண்ணப்பமும் கவனமாக பரிசிலிக்கப்படும் என அவர் கூறினர். (ந)

---

# தீவிர தேடுதல்

## ஈரானிய ஊடுருவல் குறித்து அச்சம்

பாக்தாத், ஜூன் 18

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் ஆயுதப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப் படுத்தி இருக்கின்றனர். பெரும் தேடுதல்கள் நடைபெற்று வருகின்றன.

ஈரானியர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று பாக்தாத்துக்குள் ஊடுருவி இருப்பதாக கருதப்படுவதாக பாக்தாத்தில் ராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

ரைபிள் தாங்கிய ஆயுதப் படை வீரர்கள் பாக்தாத் நோக்கிச் செல்லும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து வருகின்றனர். சாரதிகளின் அடையாள கார்ட்டுகளும் சோதனையிடப்பட்டு வருகின்றன.

இந்த வாரம் பாக்தாத்தில் பாதுகாப்புப் பொலீஸாரின் தலைமையகம் மீது குண்டுத்தாக்குதல் முயற்சி இடம் பெற்றதாக ராஜதந்திரிகள் தெரிவித்தனர். ஆனல் சேதம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட ஈரானிய ஏஜெண்ட்டுகள் ஈராக் டெலிவிஷனில் காட்டப்பட்டனர்.

ஈரானுக்கு எதிரான நாடுகளின் தூதரகங்கள், அரசாங்க கட்டடங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றைத் தாக்குவதற்கு தமக்கு ஈரானில் பயிற்சி அளிக்கப்பட்டதாக இவர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என ஈராக்கிய டெலிவிஷன் தெரிவித்தது. (த)

---

# அ. தி. மு. க. பலம் 134 ஆக உயர்வு

சென்னை, ஜூன் 18

தமிழ்நாடு சட்டசபையில் ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலம் 134 ஆக அதிகரித்துள்ளது.

தமிழக சட்ட சபையின் கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. ஒருவர், அக்கட்சியிலிருந்து விலகி அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்ததை அடுத்தே, ஆளும் கட்சியின் எண்ணிக்கை 134 ஆக உயர்ந்தது. (ந-21)

---

## பாக். எல்லையில் ஆப்கன் விமானங்கள் குண்டுவீச்சு

### 6 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்

### பாகிஸ்தான் வன்மையாக கண்டனம்

இஸ்லாமாபாத், ஜூன் 18

பாகிஸ்தான் பிரதேசத்தில் இரண்டு ஆப்கன் விமானங்கள் குண்டுகளைப் போட்டதால், 6 ஆப்கன் சிறுவர்கள் கொல்லப்பட்டனர். 2 தினங்களுக்கு முன் நடைபெற்ற இச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சு ஆப்கானிஸ்தான் தூதுவருக்கு கண்டனக் கடிதமொன்றைக் கையளித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் இளஞ் சிறுவர்கள் என்பதால் இச் சம்பவம் அதிக முக்கியத்துவம் பெறுகிறது என வெளி நாட்டமைச்சு பேச்சாளர் தூதுவருக்குக் கூறினுர்.

இந்த குற்றச் செயல்களை ஆப்கன் அதிகாரிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் ஆப்கன் விமானங்கள் பாகிஸ்தானிய வான் எல்லைக்குள் ஊடுருவிய 28 ஆவது முறை இதுவாகும் என பேச்சாளர் மேலும் கூறினுர்.

ஆப்கன் விமானம் 7 குண்டுகளைப் போட்டதாகவும் இதில் 4 குண்டுகள் பாகிஸ்தான் எல்லைக்கு 300 யார் உள்ளே வெடித்ததாகவும் கூறப்பட்டது.

இதில் 10 வயதுக்குட்பட்ட 6 ஆப்கன் சிறுவர்கள் கொல்லப்பட்டனர். ஒரு பெண் காயமுற்றுர்.

பாதிக்கப்பட்டவர்கள் பாகிஸ்தானிய எல்லைக்குள் பொலின்டா முகாமைச் சேர்ந்தவர்களாவர். (ந)

---

## 2 கென்ய விமான படை அதிகாரிகள் விபத்தில் மரணம்

நய்ரோபி, ஜூன் 18

நய்ரோபிக்கு 50 கிலோ மீட்டர் தூரத்தில் கென்ய விமானப் படையைச் சேர்ந்த விமானமொன்று விபத்துக்குள்ளானதில் இரு விமானப்படை அதிகாரி [illegible] (ரு)

---

# உலகச் செய்திகள்

---

# தி. மு. க. தேய்ந்த லாடம் என்றவர்கள் அடங்கி விட்டனர்

சென்னை, ஜூன் 18

"தேய்ந்த லாடம் எது? உடைந்த பாட்டில் எது? என்பதை இடைத்தேர்தல் முடிவுகள் தெளிவாக காட்டி விட்டன" என்று ரகுமான்கான் எம். எல். ஏ. கூறினுர்.

திருவல்லிக்கேணியில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவருமான ரகுமான்கான் பேசியதாவது:—

### மக்கள் தீர்ப்பு

என்னை உட்கார வைத்து விட்டு, ஜெயலலிதாவை தாக்கி என். வி. என். சோமு பேசினுர். நான் அம்பால் அடிப்பட்ட புரு போல் துடித்தேன். காரணம் நானும் எம். ஜி. ஆரைப் போல் பற்றும், பாசமும் உள்ளவன்.

அண்ணு நகர் தோல்வியை எம். ஜி. ஆர். மரியாதையாக ஒப்புக் கொள்ள வேண்டும். "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்று அண்ணு சொல்லியிருக்கிறுர்.

10 ஆண்டுகளுக்கு பிறகு [illegible]

---

## சமீபத்திய இடைத்தேர்தல் குறித்து ரகுமான் கருத்து

தேர்தலில் தி- மு- க- வெற்றி பெற்றுள்ளது-

இதற்கு முன்பு நடந்த பட்டதாரி தொகுதி தேர்தலிலும் மதுரை, தஞ்சையில் அவர்கள் வேட்பாளர்கள் தோற்றுர்கள்.

### தேய்ந்த லாடம் எது?

தேர்தல் பிரசாரத்தின் போது அ. தி. மு. கொள்கை பரப்புச் செயலாளர் கலைஞரை கேவலமாகப் பேசினுர். கருணநிதி காலி பாட்டில் என்றுர். காலி பாட்டிலா, முழு பாட்டிலா என்பது அவருக்கு எப்படித் தெரியும்? ஆனல் எம். ஜி. ஆர்- உடைந்த பாட்டில்- காலி பாட்டிலில் மீண்டும் நிரப்பலாம். உடைந்த பாட்டிலில் நிரப்ப முடியாது-

தி- மு- க- மணலில் கட்டிய கட்டடம், தேய்ந்து போன லாடம் என்றுர்- கருணநிதி அரசியல் சன்னியாசம் போக வேண்டும் என்றுர்.

நான் அப்போதே அவருக்கு பதில் சொன்னேன். என்னை தாக்கிப் பேசுங்கள். உங்களுக்கு இல்லாத உரிமையா, ஆனல் தலைவரைப் பற்றி பேசாதீர்கள் என்றேன்.

இன்று யார் தேய்ந்த லாடம், உடைந்த பாட்டில் என்பது தெரிந்து விட்டது. தி. மு. க. பாழடைந்த மண்டபம் அல்ல, ஆயிரங்கால மண்டபம், அழியாத இமயம் என்பதை தேர்தல் முடிவுகள் அறிவித்து விட்டன.

கலைஞரை இந்த ராமச்சந்திரன் அல்ல, அவர் அப்பன் வந்தாலும் அழிக்க முடியாது

### கள்ள ஓட்டு விவகாரம்

கள்ள ஓட்டு போட்டு ஜெயித்து விட்டதாக எம். ஜி. ஆர். கூறுகிறுர்-

அண்ணு நகர், சாந்தி காலனி போன்ற பகுதிகளில் நான் தேர்தல் பணியாற்றிய போது, தேர்தல் அன்று இறந்து; போனவர்கள் உயிரோடு வந்து காலை முதல் மாலை வரை நடமாடியதை கண்டேன். எம். ஜி. ஆரா கள்ள ஓட்டு பற்றி பேசுவது? சைத்தானு வேதம் ஓதுவது?

வெளியூர்களில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் ஆயுதங்களுடன் வந்தார்கள். என்னைப் போன்றவர்களை குறி வைத்தார்கள்.

ஆனுல் எது வந்தாலும் சந்திக்க தயாராகத் தான் நாங்கள் இருந்தோம்.

அவர்களுடைய கொள்கை பரப்புச் செயலாளர் ஜெயலலிதா இப்போது எங்கு இருக்கிறுர் என்று தெரியவில்லை.

### வேதனைப்படாதீர்

ப. உ. ச. அறிக்கை விட்டிருக்கிறுர்- "தேர்தலில் காயம் ஏற்பட்டதே தவிர தோல்வி இல்லை" என்று. "நாங்கள் மரணப்படுக்கையில் இருக்கிறேம். ஆனுல் உயிர் போகவில்லை." என்பது போல் உள்ளது.

ப. உ- ச- அவர்களே வருத்தப்படாதீர்கள், வேதனைப்படாதீர்கள். வரும் தேர்தலில் மொத்தமாக மக்கள் சமாதி கட்டிவிடுவார்கள் என்று ஆறுதல் கூறுகிறேன்.

இவ்வாறு ரகுமான்கான் கூறினுர். (த—10)

---


ரம்ழான் திருநாளை
மனேரம்யமாக
கொண்டாடுங்கள்!

உங்கள் குடும்பத்தின்
அனைவரின்
ஜவுளித் தேவைகளுக்கும்

கண்ணே ராதா
முந்தானை முடிச்சு
ரோயல் குயின்
ரூபி குயின்
கவிதா
கிளியோபெட்ரா
சிபோன் ஜோர்ஜட்
30. 30. அமெரிக்கன் ஜோர்ஜட்
பஸ் மினு
கிள்மோர் — சாரீ வகைகளுக்கும்,

ராடோ, ஆம்ஸ்ட்டீல், ரொன்சன், ஜவரினே, கிரான்ட் சேட் வகைகள் — உயர்ரக சேர்ட்டிங், சூட்டிங், சிறுவர், சிறுமியரின் ரெடிமேட் ஆடைகள் ஆகியவற்றிற்கு நம்பிக்கையுடன்

நாடுங்கள்

ஆயிஷா
டெக்ஸ்டையில்ஸ்

59, இரண்டாம் மாடி,
கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட்
(பழைய மீன் சந்தை)
கொழும்பு – 11

தொலைபேசி:– 547772

மத்திய கிழக்கு நாடுகளுக்கு

# 2,000 போத்தல் தேன் ஏற்றுமதி

குருநாகல், ஜூன் 18

மத்திய கிழக்கு நாடுகளுக்கு 2,000 போத்தல் தேன் ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது. விவசாயத் திணைக்களம் இதற்கான நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறது.

தேன் ஏற்றுமதிக்கான கேள்விக் கட்டளைகள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெறப்பட்டிருக்கின்றன.

தேன் ஏற்றுமதித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல் படுத்தும் நோக்குடன் பதுளை மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு ஊக்குவிக்கப்பட இருக்கிறது.

இதற்கமைய மேற்படி மாவட்டத்தில் தேனீ வளர்ப்புக்கான கடன் வசதிகளை வங்கிகள் மூலம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

படித்து விட்டு வேலையற்று இருக்கும் வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் சுய தொழில் வாய்ப்புக்கு தேனீ வளர்ப்புத் திட்டம் பேருதவியாக இருக்கும்— வருமானத்துக்கும் இது சிறந்த திட்டமாக அமையும் என விவசாயத் திணைக்களம் நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

(எ—138)

## வீடமைப்புத் திட்டங்கள்

நிந்தவூர், ஜூன் 18

நிந்தவூர் ஜலாலக வீடமைப்புத் திட்டமும் மாவடிப்பள்ளி ஜலால்புரம் வீடமைப்புத் திட்டமும் வரும் ஆகஸ்ட் மாதம் திறந்து வைக்கப்படும்.

பொத்துவில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வை இத் தகவலைத் தெரிவித்தார்.

அண்மையில் ஜனாப் உதுமாலெவ்வை, அம்பாறை மாவட்ட வீடமைப்புத் திணைக்கள முகாமையாளர் திரு. எஸ். எஸ். அபேசேகர, நிந்தவூர் உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் ஜனாப் ஐ. எப். அன்வர் ஆகியோர் சகிதம் மேற்படி திட்டங்களை நேரில் பார்வையிட்டார்.

பம்குடிப் ஊற ல் தலிஜஷ் ப்ர்

(த—217)

## சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே பொலீஸார் முயல்கின்றனர்

### கருத்தரங்கில் பொலீஸ் மாஅதிபர்

வவுணதீவு, ஜூன் 18

பொலீஸாரைப் பொறுத்தவரை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக அவர்கள் தமது கடமைகளைச் செய்கிறார்கள். தவிர இளைஞர்களை கைது செய்ய வேண்டுமென்ற ஆசையில் அப்பணியைப் பொலீஸார் செய்யவில்லை.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரபல கல்லூரிகளில் பொலீஸ் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட ஆலோசனைக் கருத்தரங்குகளில் பங்குகொண்டு உரையாற்றிய கிழக்குப் பிரதேச பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா கூறினர்.

மேற்படி ஆலோசனைக் கருத்தரங்குகள் இதுவரை வின்சன்ற் மகளிர் கல்லூரி, புனித சிசிலியா மகளிர் கல்லூரி, அரசடி மகா வித்தியாலயம், — மெதடிஸ்த மத்திய கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி உட்பட பல கல்லூரிகளில் நடைபெற்றுள்ளன.

தொடர்ந்து பேசிய பொலீஸ் மா அதிபர் கூறியதாவது:—

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டவுடன் அவர்களை வழிநடத்துபவர்கள் தலைமறைவாகி விடுகிறார்கள்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொள்வதோடு தாம் தவறான பாதையில் இட்டுச் செல்லப்பட்டதை உணர்ந்து வேதனைப்படுகிறார்கள்.

தவறான பாதையில் தமது பிள்ளைகள் இட்டுச் செல்லப்படுவதை உணர்ந்து பல பெற்றோர்கள் இன்று கண்ணீர் வடிக்கிறார்கள்.

இளமைப் பருவத்தில் பெற்றோரின் கவனக் குறைவினால் தான் பிள்ளைகள் தவறான பாதையில் செல்கின்றனர்.

பொலீஸாரைப் பொறுத்தவரை அவர்கள் தமது கடமைகளைத்தான் செய்கிறார்கள். அவர்களும் சாதாரண மக்களைப் போன்றவர்கள் தாம்.

அவர்களது கடமை சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகும்.

அவர்கள் கடமையைச் சரிவரச் செய்யாவிட்டால் இன்று சமூக விரோதச் செயல்கள் அதிகரிக்கும்.

இதனால் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினர்.

(எ—318)

## மக்களும் பதவியும்

### பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர்

கம்பளை, ஜூன் 18



ஜனாப் எஸ். எல். எம். எஸ். தாசீம் கம்பளை ஆண்டியா கடவத்தை ஜும்மாப் பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ரோயல் விமானப் படையில் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இவர் சேவை புரிந்திருக்கிறார். 1959 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவப் பிரிவிலும் இவர் கடமையாற்றி இருக்கிறார்.

(எ—83)

### பள்ளிவாசல் நம்பிக்கையாளர்

மல்வத்தை மஜீத்புரம் நம்பிக்கையாளரா நம்பிக்கையாளர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ஜனாப் என். ஹபீப். துணைத் தலைவர்: ஜனாப் ஐ. முகையதீன்பாவா. செயலாளர்: ஜனாப் எம். ஐ. எல். அபூபக்கர். துணைச் செயலாளர்: ஜனாப் ஏ. வெள்ளத்தம்பி. பொருளாளர். ஜனாப் எம். எம். அமீன். சபை உறுப்பினர்கள்: ஜனாப் எஸ். உதுமாலெவ்வை, ஜனாப் ஏ. கலந்தர்லெவ்வை. போஷகர். ஜனாப் எம். ஏ. மஜீத். (முன்னாள் நம்பிக்கையாளர் சபைத் தலைவர்)

(எ)

### நிர்வாகிகள்

சாய்ந்தமருது, ஜூன் 18

சாய்ந்தமருது "இலவன் ஸ்டார்ஸ்" விளையாட்டுக் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

ஆலோசகர்: ஜனாப் எஸ். சகுறுதின், தலைவர்: ஜனாப் எம். வை. எஸ்- ஆரிபீன், உப தலைவர்: ஜனாப் எம்-வை. எம்-றிஸ்வி.

இணைச்செயலாளர்கள்: ஜனாப் எஸ். எம். அபூபக்கர், ஜனாப் இஸட். ஏ. ஜாபீர்-

பொருளாளர்கள்: ஜனாப் ஏ. ஏ. சலாம், ஜனாப் எஸ். எல். எம். ஜாபீர்.

## பொலீஸார் பொதுமக்களின் நண்பர்கள் அவர்கள் எதிரிகளல்லர்

### கிழக்குப் பிரதேச பொலீஸ் அதிகாரி அறிவுரை

வவுணதீவு, ஜூன் 18

பொலீஸார் பொது மக்களின் நண்பர்களே தவிர அவர்கள் மக்களின் எதிரிகளல்லர்.

இவ்வாறு பட்டிருப்புத் தொகுதி பெரியகல்லாறு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்குப் பிரதேச பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா கூறினார்.

பெரியகல்லாறு சுப்பிரமணியர் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது.

பொலீஸ் மா அதிபருடன், பொலீஸ் அதிபர் திரு. விக்டர் பெரேரா, உதவிப் பொலீஸ் அதிபர் திரு. ஏ. கே. மைத்திரி பாலா உட்பட மாணவர்கள், ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. த. கணபதிப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

பொது மக்கள் சமூக விரோதச் செயல்கள் பற்றி அறிந்தவுடன் தாமதமின்றி எமக்குத் தகவல் தர வேண்டும்.

பொலீஸார் பொது மக்களின் நண்பர்களாகவே உள்ளார்கள். அவர்கள் ஒருபோதும் பொதுமக்களின் எதிரிகள் அல்லர்.

ஒவ்வொரு சேவையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. அக்கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுவது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பொறுப்பாகும்.

இந்நிலையில்தான் பொலீஸார் தம் கடமைகளைப் புரிகின்றார்கள்.

பொலீஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

கடமை தவறிச் செயற்பட்டால் மக்களை யார் பாதுகாப்பார்கள் என்பதைப் பொலீஸார் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினர்.

(எ—318)



வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களை பொதியில் அடைத்தல் பற்றிய கருத்தரங்கொன்று இன்று ஆரம்பமாகிறது. இம்மாதம் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ள ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அனுபவமிக்க வர்த்தகர் குழுவொன்று இலங்கை வந்திருக்கிறது.

மேற்படி குழுவினர் ஜெர்மன் தூதுவர் திரு. ஜெராட் பைபரின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குகொண்டபோது எடுக்கப்பட்ட படம். (எ*ச)

## வீதி சீர்கேடு பஸ் சேவைகள் பாதிப்பு

வெலிகாமம், ஜூன் 18

தென் இலங்கையில் உள்ள பல வீதிகள் சீரற்ற நிலையில் இருக்கின்றன.

இதனால் இப்பகுதியில் சில சேவைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் சில பஸ் சேவைகள் நிறுத்தப்பட இருப்பதாகவும் தெரிய வரு

## சலவைத் தொழிலாளர்

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. தி. கணபதிப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கடமை தவறிச் செயற்பட்டால் மக்களை யார் பாதுகாப்பார்கள் என்பதைப் பொலீஸார் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ-318)

---

தரங்கில் கலந்து கொள்ள ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அனுபவமிக்க வர்த்தகர் குழுவொன்று இலங்கை வந்திருக்கிறது.

மேற்படி குழுவினர் ஜெர்மன் தூதுவர் திரு. ஜெராட் பைபரின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குகொண்டபோது எடுக்கப்பட்ட படம். (எ*ச)

---

...ற்ற நிலையில் இருக்கின்றன.

இதனால் இப்பகுதியில் சில சேவைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் சில பஸ் சேவைகள் நிறுத்தப்பட இருப்பதாகவும் தெரிய வருகிறது.

கலுபோவிடியனெலுவ வீதியின் சீர்கேட்டால் இங்கு பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

அளுத்கம டிப்போ பஸ் சேவை எந்தச் சந்தர்ப்பத்திலும் நிறுத்தப்படலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

(எ—331)

---

வர்: ஜனுப் எம்- வை, எம்- நிஸ்வி,

இணைச்செயலாளர்கள்: ஜனுப் எஸ். எம். அபூபக்கர், ஜனுப் இஸட். ஏ. ஜாபீர்-

பொருளாளர்கள்: ஜனுப் ஏ. ஏ. சலாம், ஜனுப் எஸ். - எல். எம். ஜாபீர்.

கணக்குப் பரிசோதகர்: ஜனுப் எம். எச். எம். நைசர்.

கிரிக்கெட் காப்டன்கள்: ஜனுப் ஏ. எல். அசீர். ஜனுப் எம்- எச். எம். நபீல்.

உதைபந்தாட்ட காப்டன்கள்: ஜனுப் எஸ். எம்- மார்சூக், ஜனுப் ஏ- ஆர்- எம்.பளீல்-

ஏனைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: ஜனுப் ஏ- அவாத், ஜனுப் எம்- வை. எம். ஜெமீல், ஜனுப் ஏ. ஏ. ஸவாஹிர், ஜனுப் எம். மஜீட், ஜனுப் ஏ. எஸ். எம். ஸதாத். (எ—281)

*

எட்டியாந்தோட்டை, ஜூன் 18

டவுன் ஜும்மாப் பள்ளிவாசல் பரிபாலன சபையின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

தலைவர். ஜனுப் என். எம். எச். ஹுசைன். உப தலைவர். ஜனுப் எம். எஸ். எம். பௌசுல் நிசார்; செயலாளர்: ஜனுப் பீ. எம். அன்சாரி. உப செயலாளர்: ஜனுப் ஜே. எம். கபீர், பொருளாளர்: ஜனுப் எம். ஏ. எம். அக்ரம். (எ-346)

---

# "குரோத உணர்வுகளை வளர்ப்பதால் சமுதாய எழுச்சி தடைப்படும்"

எட்டியாந்தோட்டை, ஜூன் 18

இனங்களுக்கிடையே குரோதமும், போட்டி மனப்பான்மையும் இருக்குமானால் சிறந்த சமுதாயமொன்றைக் கட்டி எழுப்புவது சிரமமாகும்.

இவ்வாறு மாலிபொட கோள்பிங் குடும்பத்தின் தலைவர் திரு. ஜீ. ஜே. எஸ். ஓர் மாலிபொட கூறினார்.

புனித அன்னம்மாள் தேவாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்று எமது நாடு ஐக்கியம், சமாதானம் என்பவற்றை நிலைநாட்ட முயற்சி எடுத்து வருகின்றது. அம்முயற்சிக்கு மக்கள் தங்களின் ஒத்துழைப்பை நல்க வேண்டும். ஏனைய சமூகத்தினரிடையே சுமுகமாகப் பழக வேண்டும்.

சிங்களவர். தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற வேறுபாட்டை மறந்து நாம் அனைவரும் சகோதரர்கள் என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும்.

அச்சமின்றி ஒவ்வொருவருடனும் பழக வேண்டும். பலருடன் பழகும் போதுதான் கருத்துக்கள் பறிமாற்றம், மன எழுச்சி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சமத்துவம் சகோதரத்துவம் போன்ற நல்ல குணங்கள் உண்டாகின்றன.

இத்தகைய முன்னேற்றத்திற்கு சனசமூக நிலையங்கள் வழிகாட்டுகின்றன. எனவே இப்பகுதியில் சனசமூக நிலையமொன்றை அமைக்க மாலிபொட கோள்பிங் குடும்பம் முன்வந்திருக்கிறது. இதன் மூலம் மக்களிடையே நல்லெண்ணமும் நட்புறவும் ஏற்பட வழியுண்டாகும்.

கோள்பிங் குடும்ப அங்கத்தவர்களாகிய நாம் சமூகத்திற்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். எமது நடத்தையைக் கண்டு ஏனையோர் எம்மைப் பின்பற்ற வகை செய்ய வேண்டும். அதுவே நாம் நாட்டுக்குச் செய்யும் நல்லதோர் பணியாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ-336)

---

# சலவைத் தொழிலாளர்

## சம்பளத்தை பத்து ரூபாவாக அதிகரிக்க வேண்டும்

### தொண்டமானிடம் வேண்டுகோள்

கொழும்பு. ஜூன் 19

தோட்டப் புறங்களில் சலவை சலூன் தொழிலாளர்களாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் ஐந்து ரூபாவிலிருந்து பத்து ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய இலங்கை சலவை, சலூன் தொழிலாளர் யூனியன் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

தமது அங்கத்தினர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மேற்படி யூனியன் தூதுக் குழு திரு. எஸ். தொண்டமானைச் சந்தித்து தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறது.

இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சகலவிதமான சலுகைகளும் சலவை சலூன் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

தற்பொழுது ஐந்து ரூபாவாக வழங்கப்படும் வேதனம் பத்து ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதியும், ஓய்வூதியம் பெறும் வசதிகளும் சலவை சலூன் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

தொழில் சம்பந்தமான உபகரணங்களை அமைச்சின் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் இறக்குமதி செய்து குறைந்த விலையில் வழங்க வேண்டும்.

தாயகம் திரும்பும்போது பிரயாணச் செலவுகளும் இதர சலுகைகளும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இச் சந்திப்பின்போது யூனியன் பொதுச் செயலாளர் திரு. பி. எஸ். மணியம். உதவிச் செயலாளர் திரு. மாரிமுத்து, பொருளாளர் திரு. ஜெகதீஸ்வரன். இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் உடன் இருந்தனர். (எ—ய)

---

## திறைசேரிக்கு லாபம் செலுத்துதல்

# கட்டுப்பாட்டு உத்தரவை தளர்த்தும்படி

## விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 19

அரச கூட்டுத்தாபனங்கள், அரச வர்த்தக நிறுவனங்கள் ஆகியன, அவற்றின் லாபத்தில் 50 சதவீதத்தை அரசாங்க திறைசேரிக்குச் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டைத் தளர்த்தும்படி விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டுக்குரிய இலாபப் பங்கை திறைசேரியிடம் உடனடியாக வழங்க வேண்டுமென்று அவற்றுக்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது.

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச வர்த்தக நிறுவனங்கள் ஆகியனவற்றிற்கு அரசாங்கம் பெருந் தொகையான பணத்தை முதலீடு செய்திருக்கின்றது.

இலாபத்தில் 50 சதவீதத்தை திறைசேரிக்கு வருடா வருடம் செலுத்த வேண்டுமென்ற முடிவை அமைச்சரவை கடந்த பெப்ரவரி மாதம் எடுத்திருந்தது.

வரவு செலவுத் திட்டப் பற்றுக் குறையை சமாளிக்கும் பொருட்டே அமைச்சரவை இத்தகைய முடிவை எடுத்தது.

இந்தத் திட்டத்தை வாபஸ் வாங்கும்படி அரசாங்க கூட்டுத்தாபனங்களும், வர்த்தக நிறுவனங்களும் வேண்டுகோள் விடுத்திருந்தன.

ஆனால் அரசாங்கம் இதற்கு விட்டுக் கொடுக்க மறுத்து விட்டதென நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களின் 1983 ஆம் ஆண்டு கணக்கு. விவரங்கள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட்டு, இலாபப் பங்கும் வழங்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை எந்த ஒரு நிறுவனமும் இலாபப் பணம் செலுத்தியதாகத் தெரியவில்லை.

(எ—ஞ)

---

## பதுளை ஆஸ்பத்திரி வரும் நோயாளர் மருந்தின்றி கவலை

கொழும்பு, ஜூன் 18

பதுளை பெரியாஸ்பத்திரியில் பெரும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர்களினால் நியமிக்கப்படும் மருந்து வகைகள் இங்குள்ள மருந்தகத்தில் கிடைப்பதில்லை. இதனால் நோயாளிகள் அவற்றைத் தனியார் மருந்தகங்களில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊவா பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பெரிய ஆஸ்பத்திரியான மேற்படி ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாட்டினால் தினசரி சுமார் ஆயிரம் நோயாளிகள் திருப்பியனுப்பப்படுகிறார்கள் எனவும் கூறப்படுகின்றது.

(எஊ)

---

## பள்ளிவாசல் புனரமைப்பு

ஹேவாஹெட்ட, ஜூன் 18

உடுநுவர தேர்தல் தொகுதியில் ஹந்தெஸ்ஸ மாஹிங்கொடை, கண்டி ரோட் மஸ்ஜிதுல் சுமார் ஆறரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவருகிறது.

இப்பள்ளிவாசலின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. மௌலவி எஸ். எம். நுகுமான் (பஹ்ஜி) அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இப்பள்ளிவாசல் 50 வருட பழமையானதென்பது குறிப்பிடத்தக்கது. (எ-99)

---

# இன்றைய கல்விக்கொள்கை

## மாற்றப்படவேண்டியது அவசியம்

### ஆசிரிய பயிற்சிக் கருத்தரங்கில் ஆலோசனை

வாழைச்சேனை, ஜூன் 18

இன்றைய கல்விக் கொள்கை ஆரம்ப கால கல்விக் கொள்கையாகவே இருந்து வருகிறது. நாம் படித்ததையே நம் பிள்ளைகளும் கற்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

முன்னோடி பாடசாலை ஆசிரியர்களுக்கு நயினலை என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் வாழ்க்கைத் திறன்கள் பயிற்சி நிலையத்தில் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

பிரதான தொழில். தொழில் நுட்ப ஆலோசகர் திரு. எரிக் ஜே. டி. சில்வா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார்.

இவ் வைபவத்திற்கு பயிற்சி நெறியின் பிரதம முகாமையாளர் திரு. ஜே. எச். எஸ். திசேரா தலைமை வகித்தார்-

திரு. எரிக் ஜே. டி- சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தற்போது பாடசாலைகளில் கற்பிக்கப்படும் தொழில்நுட்பப் பாடத்திற்குப் பதிலாக வாழ்க்கைத் திறன் கல்வியை பரீட்சார்த்தமாக முன்னோடிப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தினோம். ஆசிரியர்கள் பலரைத் தெரிவு செய்து இப்பயிற்சிகளை வழங்கினோம்.

அவர்கள் தங்கள் பாடசாலைகளில் 6 ஆம் 7 ஆம் வகுப்புகளில் வாழ்க்கைத் திறன் பாடத்தினை செயல்படுத்தி வெற்றியும் கண்டிருக்கின்றனர்.

எங்களின் வாழ்க்கைத் திறன் பயிற்சியின் நோக்கம் மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதேயாகும்.

இளமையிலிருந்து தங்களுக்குத் தேவையான வேலைகளைத் தாங்களே செய்யக்கூடிய மாணவர்களை ஆசிரியர்களாகிய நீங்கள் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இறுதி நாள் கருத்தரங்கில் பயிற்சிக் கல்லூரி பிரதம முகாமையாளர் திரு .ஜே.எச். எஸ். திசேரா உரையாற்றினார்.

(எ—319)

---

# ஆங்கில மொழியின் அருமையை உணர்ந்து

## அதனை விருத்தி செய்ய வேண்டும்

### மாணவர்களுக்கு ஆலோசனை

புங்குடுதீவு, ஜூன் 18

"ஆங்கில மொழி அறிவின் அவசியத்தை இன்று என்றுமில்லாதவாறு மக்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர். மாணவர்கள் இந்த உண்மையினை நன்குணர்ந்து ஆங்கில மொழியறிவினை விருத்தி செய்து கொள்ள முன்வரவேண்டும்"

இவ்வாறு கூறினார் கல்வி அதிகாரி செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம்.

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தில் ஆங்கில தின விழா அண்மையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

செல்வி நவரத்தினசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.-

[illegible]

ஆங்கில அறிவின் மூலம் நமது எண்ணங்களை வெளிப்படுத்தவும், பிறரது கருத்துக்களைப் புரிந்து கொள்ளவும் முடியும். ஆங்கிலம் அந்த வகையில் நமக்குத் துணைபுரிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் தேடித் தருகிறது.

மாணவர்கள் இளமையிலிருந்தே ஆங்கிலத்தை நன்கு கற்க முயற்சிக்க வேண்டும். இத்தகைய விழாக்கள் போட்டிகள் மாணவர்களிடையே புதியதோர் எழுச்சியை, மறுமலர்ச்சியை உருவாக்குவது திண்ணம்.

ஆங்கில தின விழாவைச் சிறப்புற ஒழுங்கு செய்த இவ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் யான் பெரிதும் பாராட்டுகிறேன்.

ஆண்டு தோறும் இங்கு இவ் விழா நடைபெற வேண்டும். ஏனைய பாடசாலைகளும் இதன் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்"

இவ்வாறு அவர் கூறினார்.

[illegible]

## வானொலி

19 — 6 — 1984

காலை —

5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப் பாடல்கள்— நாகம்மா மகாலிங்கம்
6.00 சைவ நற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 புல்லாங்குழல் — என். ரமணி
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.05 வாத்தியமஞ்சரி
8 15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை —

6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 கோபுர தரிசனம் — திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 முகத்தார் வீட்டில்
8.40 நாட்டுப் பாடல்
8.45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி
9.00 செய்திகள்
9.30 நாதஸ்வரம் — நாமகிரிப்பேட்டை — கிருஷ்ணன்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 ஹெட்ஸ் அன்ட் டெய்ல்ஸ்
6.00 ரங்கன
6.25 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் — விவரணச் சித்திரம் (தமிழ்).
6.55 செய்திகள் — தமிழ்
7.15 பியூசர் அட்ரக்சன்ஸ்
7.45 இசை நிகழ்ச்சி
8.15 செய்திகள் — சிங்களம்
8.35 "ஜப்பானில் நெல் வளர்ப்பு" விவரணச் சித்திரம்.
9.00 டிபரன்ட் ஸ்ட்ரோக்ஸ்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 உதைபந்தாட்டம்
10.30 உலகச் செய்திகள்
10.35 உதைபந்தாட்டம் (தொடர்ச்சி)

### ஐ. டி. என்.

6.31 ஜெர்மன் படம்
7.00 பேன் கிளப்
7.30 பிறெண்டன் சேஸ்
8.00 டொக்டர் ஹூ
8.30 நாடகம்

# விளையாட்டு ஆரோக்கியத்துக்கு துணை புரிகின்றது

## அமைச்சர் பாக்கீர் மாக்கார் கூற்று

கொழும்பு, ஜூன் 19

விளையாட்டு உடல் ஆரோக்கியத்துக்கு பெரும் துணை புரிகின்றது. எனவே, மாணவர்கள் விளையாட்டில் கூடிய அக்கறை கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் சபாநாயகரும், பேருவளை முதல்வரும், அமைச்சருமான அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் கூறினர்.

அளுத்கமை நகரசபை விளையாட்டரங்கில் அண்மையில் பேருவளை கல்விப் பிராந்திய பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் மேற்கண்டவாறு கூறினர்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

மாணவர்கள் தேவையற்ற விஷயங்களில் கவனத்தை செலுத்தாமல் கல்வியிலேயே கவனம் செலுத்தினல் சிறந்த பெறுபேறுகளை பெற முடியும். ஆசிரியர்கள் சங்கம் முயற்சி எடுத்தால் இந்நாட்டின் சகல பாடசாலைகளிலும் சமமான பெறுபேறுகளை பெற முடியும்.

இந்நாடு அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதனல் சிறந்த, திறமையான செயல் வீரர்களின் சேவை அதிகமாக தேவைப்படுகின்றது. இத்தகைய செயல் வீரர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது.

எனவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு புத்தகக் கல்வியை மட்டும் புகட்டுவதோடு நின்று மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

— இவ்வாறு அமைச்சர் பாக்கீர் மாக்கார் கூறினர்.

பேருவளைப் பிராந்திய கல்வி அதிகாரி ஏ. அமரசிறி, உட்பட மற்றும் பல பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, அமைச்சர் பாக்கீர் மாக்கார் பரிசில்களை வழங்கினர். (ந—11)

# விளையாட்டுப் பகுதி

அடுத்த வருட முற்பகுதியில்

## இலங்கை — மே. இந்திய அணிகள் 5 தடவை மோதுகின்றன

### விக்டோரியா மாநில 150 ஆவது ஆண்டு நிறைவு கிரிக்கெட் போட்டிகள்

கொழும்பு, ஜூன் 19

ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இடம்பெறும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மேற்கிந்திய அதிவேகப் பந்து வீச்சாளர்களை இலங்கை அணி 5 தடவை சந்திக்க வேண்டியிருக்கும்.

இச்சுற்றுப் போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் ...

12 ஆம் திகதி:— இலங்கை — மேற்கிந்தியா (பிரிஸ்டலில்).

13 ஆம் திகதி:— ஆஸ்திரேலியா — மேற்கிந்தியா (பிரிஸ்டலில்).

15 ஆம் திகதி:— ஆஸ்திரேலியா — மேற்கிந்தியா (சிட்னியில்).

17 ஆம் திகதி:— இலங்கை — மேற்கிந்தியா (சிட்னியில்).

19 ஆம் திகதி:— ஆஸ்திரேலியா — இலங்கை (மெல்போர்னில்).

20 ஆம் திகதி:— ஆஸ்திரேலியா — மேற்கிந்தியா (மெல்போர்னில்).

## இல்லவிளையாட்டு போட்டிகள்

மருதமுனை, ஜூன் 19

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த சேனைக்குடியிருப்பு கணேச வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் வித்தியாலய அரங்கில் நடைபெற்றன.

மலைமகள், கலைமகள், திருமகள் ஆகிய இல்லங்கள் போட்டிகளில் கலந்து கொண்டன.

கல்முனை வட்டாரக் கல்வி அதிகாரி ஜனப் மருதூர் ஏ. மஜீத் போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

கல்முனை வட்டார உடற்கல்வியதிகாரி ஜனப் கே. எல். அபூபக்கர் லெப்பை கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். (ந—190)



# இலங்கை அணிக்கு நிர்வாகியாக நீல் சண்முகம்

கொழும்பு, ஜூன் 19

இலங்கை தேசிய அணியின் முன்னாள் கிரிக்கெட் ஆட்ட வீரரான நீல் சண்முகம் இலங்கை கிரிகெட் அணிக்கு நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இலங்கை கிரிகெட் அணி ஜூலை 21 ஆம் திகதி இங்கிலாந்துக்குச் செல்கிறது.

அங்கு பல பிராந்திய கிரிக்கெட் அணிகளுடன் கிரிக்கெட் போட்டிகளில் ஈடுபட்டபின் ஆகஸ்ட் 23 ஆம் திகதி இங்கிலாந்து அணியுடன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொள்ளும். கிரிக்கெட் விளையாட்டின் தலைமையகம் எனக் கருதப்படும் லோர்ட்ஸ் மைதானத்தில் இந்த டெஸ்ட் போட்டி நடைபெறும்.

இங்கிலாந்து செல்லும் இந்த அணிக்கே நீல் சண்முகம் நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

உதவி நிர்வாகியாக முன்னாள் இலங்கை கிரிக்கெட் தலைவரான அனுர தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். (ந)

## பில்லியர்ட்ஸ் போட்டியில் 25 கழகங்கள்

கொழும்பு, ஜூன் 19

அகில இலங்கையின் கழகங்களுக்கு இடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர் சுற்றுப் போட்டியில் 25 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இலங்கை பில்லியர்ட்ஸ் ஒன்றியம் 4 டிவிஸன்களில் இச் சுற்றுப் போட்டியினை நடத்தவுள்ளது. (ந)

## இன்றைய திரைகளில்

5—வது வாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சரஸ்வதி
(திருமலை)
6—00 9—30.

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

# ஆஸ்பத்திரியில் சாரணர்கள் சிரமதான பணி

வவுணதீவு, ஜூன் 18

மட்டக்களப்பு பிரதான வைத்திய சாலையில் மாவட்ட பாடசாலை சாரண மாணவர்கள் சிரமதானமொன்றை அண்மையில் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் ஜனப் ஹப்லின் சாம்டின் இச்சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார்.

6.31 ஜெர்மன் படம்
7.00 பேன் இளப்
7.30 பிறெண்டன் சேஸ்
8.00 டொக்டர் ஹூ
8.30 நாடகம்
9.30 செய்திகள் - ஆங்கிலம்
9.45 நாடகம் (தொடர்ச்சி)

வீரர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது.

எனவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு புத்தகக் கல்வியை மட்டும் புகட்டுவதோடு நின்று விடாமல் உடற் பயிற்சி, விளையாட்டு போன்ற துறைகளிலும்

# கலாசாலைகளில் பயிற்சி பெறும் ஆசிரியர் பலருக்கு விடுதி வசதி இல்லையாம்

## சம்பள மீளாய்வுக் குழு அறிவிப்பு

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறும் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு விடுதி வசதி இல்லாத குறை பற்றி சம்பள மீளாய்வுக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

தற்போது நாட்டில் பயிற்சி பெற்று வரும் 8,600 ஆசிரியர்களுள் 3,200 பேருக்கே விடுதி வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஏனையோர் தமது வீடுகளிலும், தனியார் விடுதிகளிலும் இருந்து பயிற்சிக்குச் சென்று வருகிறார்கள்.

விடுதி வசதி இல்லாத காரணத்தாலும், போக்குவரத்துச் சிரமங்களினாலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து நேர காலத்தோடு இருப்பிடம் திரும்பி வருகின்றனர்.

அதனால் அவர்கள் பல வெளிக்கள பயிற்சி நெறிகளைத் தவற விடுவதாகத் தெரிய வந்திருக்கிறது.

எல்லோருக்கும் முற்றும் முழுதான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டியது மிக அவசியம். அதற்கேற்ற மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களுக்கான சம்பள மீளாய்வுக் குழு மேற்கண்டவாறு கல்வி அமைச்சுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது. (எ- ர)

# தொழிலாளர் நலன் கருதி 13 கருத்தரங்குகள்

கொழும்பு, ஜூன் 19

ஆசிய அமெரிக்க சுதந்திர தொழிற்சங்க சம்மேளனமும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் இணைந்து "அடிப்படை தொழிற் சங்கக் கல்வி" என்ற தலைப்பில் தொழிலாளர்களுக்கான 13 கருத்தரங்குகளை நடத்த முன்வந்திருக்கின்றன.

16 ஆம் திகதி ஆரம்பமாகிய இக் கருத்தரங்கு 26 ஆம் திகதிவரை நடைபெறும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

பேருபோவில, வத்தேகபிலதொட்ட, வகரக்க செஸ்டவொப், எல்பிட்டிய, மாதுகந்த, டெனியாய அனில் கந்த, எல்பிட்டிய மாப்பலகந்தை, தேவாலகந்தை, இந்துருவகல்லேன, அப்புகஸ்தன்ன பெருந்தோட்டங்களில் கருத்தரங்குகள் நடைபெறும்.

தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள் பிரஸ்தாப கருத்தரங்குகளில் உரையாற்றுவார்கள்.

இக் கருத்தரங்குகளை ஆசிய அமெரிக்க சுதந்திர தொழிற் சங்க சம்மேளனத்தின் அனுசரணையுடன் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் நலக் கல்வி இயக்குனர் செல்வி பேரின்பரூபி நெறிப்படுத்தி இருக்கிறார்.

இக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் தொழிற்சங்க தலைவர்கள், மகளிர் பிரிவு அமைப்பாளர்கள் தொழிற்சங்க செயலாளர்கள் ஆகியோருக்கு மதிய போசனமும் பிரயாணச் செலவுகளும் வழங்கப்படும். (எ-ய)

களை இலங்கை அணி 5 தடவை சந்திக்க வேண்டியிருக்கும்.

இச்சுற்றுப் போட்டியில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் 7 நாடுகள் பங்குபற்றுகின்றன. இதில் இலங்கை அணி "ஏ" பிரிவில் மேற்கிந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய அணிகளுடன் போட்டியிடும்.

இங்கிலாந்து, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் "பி" பிரிவில் போட்டியிடுகின்றன.

"ஏ" பிரிவு அணிகளின் போட்டி அட்டவணை வருமாறு:—

ஜனவரி 1985.

6ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - மேற்கிந்தியா (மெல்போர்னில்).

8 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - இலங்கை (சிட்னியில்).

10 ஆம் திகதி:- இலங்கை - மேற்கிந்தியா (ஹொபார்ட்டில்).

19 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - இலங்கை (மெல்போர்னில்).

20 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - மேற்கிந்தியா (மெல்போர்னில்).

23 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - இலங்கை (சிட்னியில்).

26 ஆம் திகதி:- இலங்கை - மேற்கிந்தியா (அடிலெய்ட்டில்).

27 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - மேற்கிந்தியா (அடிலெய்ட்டில்).

28 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - இலங்கை (அடிலெய்ட்டில்).

பெப்ரவரி 1985.

2ஆம் திகதி:- இலங்கை - மேற்கிந்தியா (பேர்த்தில்).

3 ஆம் திகதி:- ஆஸ்திரேலியா - இலங்கை (பேர்த்தில்).

6ஆம் திகதி:- இறுதிப் போட்டி (சிட்னியில்).

10ஆம் திகதி:- இறுதிப் போட்டி (மெல்போர்னில்).

12 ஆம் திகதி:- இறுதிப் போட்டி (சிட்னியில்). (ந)



மட்டக்களப்பு காங்கேயன் ஓடை அரசினர் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்வி அதிகாரி ஜனாப் எம். சம்சுதீன் வெற்றியீட்டிய ஒரு மாணவிக்கு பரிசு வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். (ந—318)


[படம்: இரா. உதயகுமார்]

னர்.

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் ஜனாப் ஹறப்லின் சாம்டின் இச்சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார்.

கலந்து கொண்ட சாரணர்கள் வார்ட் கட்டடங்கள், கட்டில்களை புனரமைப்பு செய்வதோடு வெளி வீதிகளை துப்பரவு செய்வதிலும் ஈடுபட்டனர்.

இவ்வைபவத்தில் கிழக்கு பிராந்திய சாரண ஆணையாளர் திரு. விஜிததரணியகல, மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. இரா. தியாகலிங்கம், வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் வி. ஜெகநாதன், மாநகர சபை ஆணையாளர் திரு. பெனடிற் தார்சிசியஸ் உட்பட பல்வேறு திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ந—318)



அண்மையில் சென். ஜோசப்ஸ் தடாகத்தில் நடைபெற்ற கனிஷ்ட நீச்சல் போட்டிகளில் 13 வயதுக்குட்பட்ட போட்டியில் சாதனையை நிலைநாட்டிய சென். ஜோசப்ஸ் கல்லூரி மாணவன் ரோஹித பொன்சேகாவைப் படத்தில் காண்க.

200 மீட்டர் "பிரெஸ்ட் ஸ்ட்ரோக்" போட்டியில் இவர் 10 வருடங்களாக நிலைபெற்ற சாதனை ஒன்றை முறியடித்தார். (ந*—ச)

# வட்டார விளையாட்டு போட்டிகள்

குருநாகல், ஜூன் 18

குருநாகல் தமிழ் வட்டார விளையாட்டுப் போட்டி அண்மையில் குருநாகல் இந்து தமிழ் வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டியில் 18 தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் கலந்து கொண்டன.

கு/பறகஹதெனிய மத்திய கல்லூரி 242 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. இப்பாடசாலை சிரேஷ்டப் பிரிவிலும், கனிஷ்டப் பிரிவிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றதுடன் ஐந்து சாம்பியன் கிண்ணங்களையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் வருமாறு:-

19 வயதின் கீழ் ஆண்:- எம். எஸ். எம். ஜிப்ரி.

19 வயதின் கீழ் பெண்:- எம். எல். எம். ஆப்சாத்பேகம்.

17 வயதின் கீழ் பெண்:- பாத்திமா ரைசா.

15 வயதின் கீழ் பெண்:- நபீருண் நிஸா.

13 வயதின் கீழ் பெண்:- எஸ். நளீரா. (ந—138)

# பாடசாலை றகர்

கொழும்பு, ஜூன் 19

றோயல் கல்லூரி அணிக்கும், சென். ஜோசப்ஸ் கல்லூரி அணிக்குமிடையே ரீட் அவென்யூவில் நடைபெற்ற றகர் போட்டியில் றோயல் அணி 17—6 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 7—0 புள்ளிகளால் றோயல் அணி முன்னணியில் திகழ்ந்தது.

அஹமத் காதர், சிரோ நாணயக்கார, கே. உஸ்மான் ஆகியோர் றோயல் அணிக்கும்,

ரோஹான் அந்தனி சென். ஜோசப்ஸ் அணிக்கும் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

ரவி மெண்டிஸ் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்,

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளின் போட்டியில் றோயல் அணி 8—0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

*

கொழும்பு, ஜூன் 19

இசிப்பத்தன கல்லூரி அணிக்கும், வெஸ்லிக் கல்லூரி அணிக்குமிடையே ஹவலொக் பூங்காவில் நடைபெற்ற றகர் போட்டியில் இசிப்பத்தன அணி 48—0 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 18—0 புள்ளிகளால் இசிப்பத்தன அணி முன்னணியில் நின்றது.

காமினி சேனநாயக்கா, கீர்த்தி வீரசிங்க, நியோமல் பெர்னாண்டோ, நிசாம் ஜமால்தின், சந்தன திப்தி ஆகியோர் இசிப்பத்தன அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

சி. எஸ். பெர்னாண்டோ இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (ந)

*

கொழும்பு, ஜூன் 19

மலியதேவா கல்லூரி அணிக்கும், ஆனந்தாக் கல்லூரி அணிக்குமிடையே குருநாகலையில் நடைபெற்ற றகர் போட்டியில் மலியதேவா அணி 4—0 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

இடைவேளையின் போது, ஒரு அணியும் புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.


நிலந்த டயஸ் மலியதேவா அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

உதேனி குணரட்ன இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆனந்தாக் கல்லூரி 4—0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்




ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில், தலைமைத்துவத்தில் இளைஞர்கள் பற்றிய பயிற்சி முகாம் ஒன்று கொழும்பு கொள்ளுப்பிட்டி வை. டப்ளியூ. சி. ஏ. மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்கு ஜெர்மன் தூதுவர் டாக்டர் ஜெர்ஹார்ட் பீவ்வர் அங்கு உரை நிகழ்த்துகையில் எடுத்த படம். (ப)

## தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான போட்டி பரீட்சை

கொழும்பு, ஜூன் 19

உள்ளூராட்சி சேவைக்கு தட்டெழுத்தாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும்.

உள்ளூராட்சி சேவைப் பணிப்பாளர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.


தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்தப் போட்டிப் பரீட்சை நடத்தப்படும்.

தட்டெழுத்தில் அனுபவம் உள்ள ஜீ. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றவர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

18 வயதுக்கும், 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதிவரை மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்க முடியும்.

போட்டிப் பரீட்சை ஜூலை மாதம் 28 ஆம் திகதி கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் நடத்தப்படும்.

(ப- 11)



ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பாரிஸிலிருந்து கொன்கோட் விமான மூலம் அமெரிக்காவின் வேர்ஜீனியா மாகாணத்தில் விமானப்படைத் தளம் ஒன்றில் சனிக்கிழமை காலை வந்திறங்கினார். வில்லியம்ஸ் பேர்க் நகர மேயர் ரொபேர்ட் வாக்கர் அங்கு ஜனாதிபதியை வரவேற்ற போது எடுத்த படம். (ப)

# சர்வகட்சி மாநாட்டு முட்டுக்கட்டையை அகற்ற இந்திரா முயற்சி

## ஜே. ஆரை இதற்காகவே அழைக்கிறார் என "இந்து" தகவல்

கொழும்பு, ஜூன் 19

சர்வகட்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையை நீக்கும் முகமாகவே இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை புதுடில்லிக்கு அழைத்திருக்கிறார்.

இது குறித்து பிரதமர் இந்திரா காந்தி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார்.

தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணுமாறு இலங்கையைத் தூண்டுவதற்காக இலங்கை ஜனாதிபதியை பிரதமர் இந்திரா புதுடில்லி வர அழைத்திருக்கிறார்.

சர்வகட்சி மாநாட்டின் முன்னைய நிலைமைக்கு இட்டுச் செல...

## ஹெரோயின் பாவித்த மாணவியர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூன் 19

பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து ஹெரோயின் போதைப் பொருளைப் பாவித்த பாடசாலை மாணவ, மாணவிகள் அறுவர் இம்மாதம் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

கெஸ்பாவைப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் சிலர் ஹெரோயின் பாவிப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அங்கு சென்ற பிலியந்தலை பொலீஸார் மேற்படி மாணவர்களைக் கைது செய்தனர்.

மொரட்டுவை நீதிவான் திரு. தம்மிக தூண்டுகொட முன்னிலையில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை இம் மாதம் 27 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ப- 11)

## 1½ லட்ச ரூபா இரத்தினக்கற்கள் கொள்ளையடிப்பு

கொழும்பு, ஜூன் 19

சுதலவத்தை பேரகலைச் ...

இரத்தினக்கல் கடைச் சொந்தக்காரர் இரவ...



## கொள்ளையடிப்பு

கொழும்பு, ஜூன் 19

கஹுவத்தை பேரகலைச் சந்தியில் இரத்தினக் கல் நிறுவனம் ஒன்றுக்குள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்து ஒரு லட்சத்து 53 ஆயிரம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களையும், ஆறுயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இரத்தினக்கல் கடைச் சொந்தக்காரர் இரவு கடையை மூடிவிட்டு படுக்கைக்குச் செல்லும் வேளையில் ஒரு கோஷ்டியினர் முன் கதவைப் பலவந்தமாக திறந்துகொண்டு கடையினுள் நுழைந்தனர்.

கடைச் சொந்தக்காரரும், கடையில் வேலை செய்யும் ஊழியர்கள் இருவருமே அச் சமயம் கடையில் இருந்தனர். அவர்களைப் பயமுறுத்திய கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்த இரத்தினக் கற்களையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

கஹுவத்தை பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ப- 11)



கொழும்பு கோட்டையில் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு செல்லும் வீதி மழை நாட்களில் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கிறது. இந்த வீதியால் செல்லும் பாதசாரிகள் பெரும் அவஸ்தைக்கு உள்ளாகின்றனர். (ப)

## பொற்கோவில் தாக்குதலுக்கு ஸெயில் சிங் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 18

அமிர்தசரஸ் புனித பொற்கோயிலில் சீக்கிய தீவிரவாதிகள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலை சீக்கியரான இந்திய ஜனாதிபதி ஸெயில் சிங் பகிரங்கமாக ஆதரித்து கருத்து வெளியிட்டார்.

பொற்கோயிலுக்குள் புகலிடமடைந்திருந்த தீவிரவாத சீக்கியர்கள் சரணடைந்திருந்தால் அந்தத் தாக்குதல் அவசியமற்றதாகி இருக்கும், என்றும் அவர் டெலிவிஷனில் இன்று உரை நிகழ்த்துகையில் மேலும் சொன்னர். (ப)

# இந்து சமுத்திரத்தில் அமெ.

## படைபலம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 19

இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா நெருக்கடி நிலைகளின் போது பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் படை பலத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கவிருக்கிறது.

இப்போது 2 லட்சத்து 20 ஆயிரம் துருப்புக்களை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கா வைத்திருக்கிறது- இந்தப் படைபலம் இரட்டிப்பாக அதிகரிக்கப்படும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை பற்றிய கொள்கைகளில் நிபுணரான அமெரிக்க பேராசிரியர் லரி போவ்மன் வெள்ளிக்கிழமை கொழும்பு அமெரிக்க நிலையத்தில் உரை நிகழ்த்துகையில் இந்த விவரத்தை வெளியிட்டார்.

தென்கிழக்கு ஆசியாவில் ரஷ்யாவின் ஊடுருவல் அதிகரித்து வருவதால் இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா தான் இப்போது வைத்திருக்கும் படைபலம் போதாது என்று கருதுகிறது என்று அவர் சொன்னர். (ப)

ஜே. ஆர். ஜெயவர்த்தனவை புதுடில்லிக்கு அழைத்திருக்கிறார்.

வட பகுதியில் தமிழ் சமூகத்தினருக்குப் பிராந்திய சுயாட்சி கொடுப்பதென்ற தனது முன்னைய முடிவை இலங்கை அரசாங்கம் மாற்றியதாலேயே இந்த முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது.

சென்னையிலிருந்து வெளிவரும் "இந்து" பத்திரிகை 15 ஆம் திகதிய இதழில் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்துவின் அரசியல் நிருபர் ஜி. கே. ரெட்டியின் பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்திருப்பதாவது:—

சர்வகட்சி மாநாட்டில் முட்டுக்கட்டை நிலையைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து இந்தியா மீது படுமோசமான தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

அழைத்திருக்கிறார்.

சர்வகட்சி மாநாட்டின் முன்னைய நிலைமைக்கு இட்டுச் செல்வதற்கு உயர்மட்ட ரீதியான பிரத்தியேக பேச்சுவார்த்தைகள் வழிவகுக்கலாம் என்ற நம்பிக்கையிலேயே திரு. ஜெயவர்த்தனவுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், அமெரிக்க அரசாங்கங்கள் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் முயற்சிகளை வரவேற்றுள்ளன.

திரு. ஜெயவர்த்தன வாஷிங்டனுக்கும், லண்டனுக்கும் மேற்கொள்ளும் விஜயங்களின்போது இந்தியாவின் நல்ல பணியைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண திரு. ஜெயவர்த்தன முன்வரவேண்டும் என பிரிட்டிஷ், அமெரிக்க அரசாங்கங்கள் திரு. ஜெயவர்த்தனவை வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

— மேற்கண்டவாறு ஹிந்து பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (ப-8)

## குடும்ப சச்சரவு: முதியவர்களுக்கு வெட்டுக்காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

இரு குடும்பங்களுக்கு இடையில் மூண்ட சச்சரவு காரணமாக இரு முதியவர்கள் வெட்டுக் காயங்களுக்குப் பலியானர்கள். நால்வர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏழாலை மேற்கில் இச்சம்பவம் நடைபெற்றது.

பத்து பிள்ளைகளின் தந்தையான அப்புக்குட்டி தர்மலிங்கம் (55 வயது), மூன்று பிள்ளைகளின் தந்தையான பெரியார் அல்லது சடையன் கந்தையா (65 வயது) ஆகியோரே கொலையுண்டவர்கள் ஆவர்.

அண்ணாமலை தவராசா (22), தளையசிங்கம் சத்தியசீலன் (32), செல்வரத்தினம் (45), சிவானந்தராசா (26) ஆகியோர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க- 120)

### மத்துகமை மாணவன் கொலை:

# சந்தேக நபர்கள் தொடர்ந்துவிளக்கமறியலில்

கொழும்பு, ஜூன் 19

மத்துகமை சமன்குமார திலகரத்ன என்ற மாணவன் கொலை தொடர்பாக கைதாகியிருக்கும் இரு சந்தேக நபர்களையும், எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மத்துகமை மாஜிஸ்திரேட் திரு. அய்வன் பெர்னுண்டோ இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் பற்றியும், இறந்த சிறுவனின் சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனுலேயே சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி, மத்துகமை பொலீஸ் தலைமையக பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. பியப்பரணகே, மாஜிஸ்திரேட்டை வேண்டிக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்தே, மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களை இம்மாதம் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் மிகவும் பாதுகாப்புடனேயே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். மத்துகமையைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள், மேற்படி வழக்கை பார்வையிடுவதற்காக நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர்.

மேற்படி கொலை வழக்குத் தொடர்பாக ஏ. பிரேமரத்ன, தர்மசிறி பீரிஸ் ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப் பட்டிருக்கின்றனர்.

பிரேமரத்ன என்பவர் முன்னுள் பொலீஸ் அதிகாரியாக கடமை புரிந்தவர் என்றும் கூறப்படுகின்றது. (எ-11)

# தொலைத் தொடர்பு திணைக்களத்தில்

## "ஓவர்டைம்" முறை ஒழிப்பு

தொலைத் தொடர்புகள் திணைக்களத்தால் இதுகால வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த (மேலதிக நேர வேலை) ஓவர் டைம் முறை இம்மாதம் முதல் ஒழிக்கப்படும்.

இம் மாதம் முதல் மேலதிக நேர வேலைகளில் ஈடுபடுவோருக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாதென சம்பந்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓவர் டைம் கடமை தொடர்பான மேற்பார்வைகள் இனிமேல் அந்தந்தப் பிரிவுத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப் பட்டிருக்கிறது.

இதேவேளை புதிய ஓவர் டைம் சட்ட திட்டத்தின் கீழ் இச் சேவையில் ஈடுபடும் அதிகாரி ஒருவர் 30 நிமிடங்களுக்கு தமது வேலைத் தளத்தை விட்டு வெளியே சென்றிருந்தால் அது தொடர்பாக அப் பிரிவின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும்.

மேற்படி திணைக்களத்தில் கடமைகளைச் சரிவரச் செய்யும் பொருட்டே இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. இதுபற்றி திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ- 11)

## கடனை திருப்பி செலுத்தாதவரின் படகுகள் பறிமுதல்

கொழும்பு, ஜூன் 19

மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் உதவிகளைப் பலர் திருப்பிச் செலுத்தாதிருக்கின்றனர். அவர்களின் மீன்பிடிப் படகுகளை திரும்பப் பொறுப்பேற்கும் வேலைத் திட்டம் ஒன்றை வங்கிகள் ஆரம்பித்திருக்கின்றன.

மேற்படி வங்கிகளில் மீனவர்கள் இதுவரை 7 கோடி 50 லட்சம் ரூபாவை கடனுகப் பெற்றுள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவிக்கின்றது. (ப- 11)


# சவரின் பார் வெட்டுத் துண்டுகள்

சகல இல்லத்தரசிகளையும்,
பட்டிக் தயாரிப்பாளர்களையும்
அழைக்கிறோம்!

சவரின் பார் வெட்டுத் துண்டுகள் பின்வரும் விலைகளில் கிடைக்கும்:—

மொத்த விற்பனை
**ரூ. 23/- ஒரு கிலோ,**

சில்லறை விற்பனை
**ரூ. 25/- ஒரு கிலோ.**

தொடர்பு கொள்க:—

**V. T. V. தெய்வநாயகம் பிள்ளை அன்ட் கம்பனி,**
56, 3ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு — 11 தொலைபேசி: 22353.



தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 19 ஜூன் 1984